ජාතික තරුණ සේවා සභාව

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

National Youth Services Council

2022

වාර්ෂික වාර්තාව

வருடாந்த அறிக்கை ANNUAL REPORT

வருடாந்த அறிக்கை
2022

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

அறிமுகம் ... iii
தொலை நோக்கு ... iv
நோக்கங்கள் ... iv
1. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ... 1
1.1. ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு ... 2
1.2. மன்றத்தின் பணிப்பாளர் சபையின் பெயர்ப் பட்டியல் ... 3
2. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் ... 5
3. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வரவுகள் மற்றும் செலவுகள் தொடர்பான விபரம் ... 6
3.1. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடுகளின் வரவுகள் தொடர்பான விபரங்கள் ... 6
(ரூ 000) ... 6
3.2. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடுகளின் செலவுகள் ... 7
3.3 தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு திறைசேரி, உள்ளக பண ஈட்டல்கள் மற்றும் ஏனைய வெளிவாரியான நிறுவனங்களின் ஊடாக நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் ஒதுக்கீடுகளின் மூலம் ஏற்கப்பட்ட நிருவாக மற்றும் அபிவிருத்திச் செலவுகள் (ரூபா மில்லியன்கள்) ... 8
3.4 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய செலவுகளின் சாராம்சம் -2022 ... 9
4. அபிவிருத்திச் செயற்பாடுகள் - 2022 ... 10
4.1. கலைத்திறன் அபிவிருத்திச் செயற்பாடுகள் ... 11
4.2. சர்வதேச இளைஞர் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் ... 13
4.3. இளைஞர் அமைப்புக்களின் அபிவிருத்திச் செயற்பாடுகள் ... 15
4.4. தேசிய இளைஞர் விருது வழங்கல் செயற்பாடுகள் ... 18
4.5. விளையாட்டுத்துறை அபிவிருத்திச் செயற்பாடுகள் ... 19
4.6. தொழிநுட்ப மற்றும் தொழில்சார் பயிற்சிச் செயற்பாடுகள் ... 22
4.7. பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டுச் செயற்பாடுகள் ... 23
4.8. தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு ... 24
4.9. விவசாய அபிவிருத்தி செயற்பாடுகள் ... 24
4.10. ஊடகப் பிரிவு ... 25
4.11. நிஸ்கோ வீடியோச் செயற்பாடுகள் ... 26
4.12. திட்டமிடல் மற்றும் செயலாற்றுகை மீளாய்வுச் செயற்பாடுகள் ... 26
4.13. தகவல் தொழிநுட்பச் செயற்பாடுகள் ... 27
4.14. தொழில்சார் வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனை வழங்கல் செயற்பாடுகள். ... 28

4.15. விஷேட கருத்திட்டச் செயற்பாடுகள் 30

4.16. செயலாற்றுகை மதிப்பீடுகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிச் செயற்பாடுகள்32

5.தாபன ரீதியான நடவடிக்கைகள் 33

5.1 பெருநிறுவன விவகார 33

5.2 பெறுகை நடவடிக்கைகள் 37

5.3 போக்குவரத்து நடவடிக்கைகள் 37

5.4 உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் 37

5.5 செயலாளர் அலுவலகத்துடன் தொடர்பான நடவடிக்கைகள் 37

5.6 சட்டப் புலனாய்வுச் செயற்பாடுகள். 37

5.7 நிர்மாணிப்புக்கள் பிரிவின் செயற்பாடுகள். 38

5.8 நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக 2022 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட முயற்சிகள் 38

5.9 2022 ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட விஷேட வெற்றிகள் (புகைப்படங்களுடன்) 39

6 செயலாற்றுகை அறிக்கை 2022 41

6.1 தாபனத்தின் செயலாற்றுகை 41

6.2 குறுகிய கால மற்றும் நடுத்தரக் கால நடவடிக்கைகள் 43

7 2022 ஆம் ஆண்டிற்கு உரிய வகையில் கணக்காய்வு விசாரணைகளின் மூலம் முன்வைக்கப்பட்டு உள்ள விடயங்களை சீர் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை 44

8 சார்ந்த அறிக்கைகள் / ஆவணங்கள். 51

9 பின்னிணைப்பு 01 - கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 52

10 இணைப்பு 02 – நிதிக் கணக்காய்வுக் கூற்று 53

11 தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2022 ஆம் ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்கு முறைகளின் தேவைப்பாடு தொடர்பான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கை 69

அறிமுகம்

1979 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க தேசிய இளைஞர் சேவைகள் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டு உள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இலங்கைய இளைஞர் சமூகத்தின் அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புள்ள பிரதான அரச நிறுவனம் ஒன்றாகக் குறிப்பிட முடியும். மேற்படி பிரதான நோக்கத்தினை அடைந்து கொள்ளும் பொருட்டு நான்கு வருட காலத்திற்கும் மேலாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மிகவும் முனைப்பான வகையில் செயற்பட்டு வருகின்றது. அதன் பிரதான தலைமையகம் மஹரகமையில் அமைந்து உள்ளதுடன், 09 மாகாண அலுவலகங்களும், 26 மாவட்ட அலுவலகங்களும் மற்றும் 58 பயிற்சி நிலையங்களும் 14 பிரதான பண்ணைகளும் நாடு பூராகவும் அமைந்து உள்ளன. மேற்படி நிறுவனங்களின் ஊடாக பாரிய அளவிலான சேவை ஒன்று இளைஞர்களுக்காக பயனுறுதி உள்ள வகையிலும் மற்றும் வினைத்திறனுடனும் வழங்கப்பட்டு வருகின்றது.

தற்போதைய இலங்கை ஆயிரம் ஆண்டு கால அபிவிருத்தியினை நோக்கிப் பயணிக்கும் காலம் ஒன்றில் அதற்கு வலுவூட்டி இலங்கை இளைஞர்களை சிறந்த முறையில் நெறிப்படுத்தல் தொடர்பில் முதன்மை அரச நிறுவனம் ஒன்றாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திடம் விஷேட பொறுப்பு ஒன்று ஒப்படைக்கப்பட்டு உள்ளது.சுபீட்சத்தின் தொலை நோக்கு எனும் தேசிய கொள்கையின் வலுமிக்க இளைஞர் சமுதாயம் ஒன்றினைத் தோற்றுவிப்பதற்காக வருடம் பூராகவும் இளைஞர்களை வலுவூட்டும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. இளைஞர் யுவதிகளின் எதிர்கால அபிலாஷைகளைப் புரிந்து கொண்டு மற்றும் வாழ்க்கை இலக்குகளை வெற்றி கொள்வதற்கு அர்த்தமுள்ள வகையில் தலையிடுவதன் மூலம், அவர்களை வலுமிக்க ஒழுக்க நெறியுள்ள பயனுறுதியுள்ள பிரசைகளாக உருவாக்குவதற்கும் மகிழ்ச்சியாக வாழும் குடும்பம் ஒன்றினை இளைஞர்களுள் உருவாக்குவதற்கும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் பொறுப்புடன் செயற்பட்டு வருகின்றது.

தற்கால இலங்கைய இளைஞர் சமூகத்தின் தேவைப்பாடுகளை அடையாளம் கண்டு அவர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயன்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக பல்வகைப்படுத்தப்பட்ட காலத்திற்கு ஏற்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நோக்கம் ஆகும். மேற்படி நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக இளைஞர் யுவதிகளை வீட்டுத் தோட்டங்கள் மற்றும் விவசாயக் கைத்தொழிலில் ஈடுபடச் செய்தல், இளைஞர்களை தொழில் முயற்சியாளர்களாக மாற்றுதல், இளைஞர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களை அபிவிருத்தி செய்தல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையினை மையமாகக் கொண்ட நவீன தொழிநுட்ப அறிவினைக் கொண்ட தொழில் சார் பயிற்சிகளை வழங்குதல் மற்றும் இளைஞர் யுவதிகளின் மற்றும் அவ்வாறே உத்தியோகத்தர்களின் கொள்ளளவினை விருத்தி செய்தல் மற்றும் தலைமைத்துவத் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன நடைமுறைப்படுத்தப்படுவதுடன் தேசிய கொள்கைகள் சட்டகத்தினுள் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளும் வகையிலான ஏராளமான நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இவற்றுள் தொண்டர் சேவைகளாக நாடு பூராகவும் மேற்கொள்ளப்படும் ஏராளமான நிகழ்ச்சித்திட்டங்களும் உள்ளடங்கும்.

இளைஞர் அபிவிருத்தியின் முன்னோடியாக தாபன ரீதியான இலக்குகளை நோக்கிப் பயணிக்கும் போது பௌதீக, நிதி சார் இலக்குகளைக் கட்டியெழுப்பி ஆண்டில் ஏற்படும் சவால்கள் மற்றும் இயற்கையான நெருக்கடிகளுக்கு வெற்றிகரமான முறையில் முகங்கொடுத்து அதனூடாக பாரியளவிலான சேவைகளை இளைஞர் சமுதாயத்திற்கு வழங்கும் நோக்குடன் இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் தகவல்களை 2022 ஆம் ஆண்டின் இறுதியில் வருடாந்த அறிக்கையின் உதவியுடன் பிரதிபலிக்கக் கூடியதாக உள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சகல தாபன ரீதியான பணிகளையும் வெற்றியடையச் செய்து கொள்வதற்காக வழிகாட்டல் தலைமைத்துவத்தினை வழங்கிய விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சுச் செயலாளர் உட்பட சகல உத்தியோகத்தர்களுக்கும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் / பணிப்பாளர் நாயகம் உட்பட சகல அலுவலர் குழாத்தினரையும் மிகவும் கௌரவ பூர்வமாக நினைவு கூறுகின்றோம்.

திட்டமிட்டல் மற்றும் செயலாற்றுகை மீளாய்வுகள் பிரிவ

தொலை நோக்கு

ஒரு சக்திவாய்ந்த இளம் இலங்கையர்.

செயற்பணி

உள்ளூர் மற்றும் சர்வதேச வாய்ப்புகளைப் பயன்படுத்தி வாழ்க்கைச் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் இலங்கை இளைஞர்களுக்கு வலுவூட்டுவதற்கான வசதிகளை வழங்குதல்.

நோக்கங்கள்

1. தேசிய உணர்வு தொடர்பான ஊக்கம், ஒழுக்கம் தொடர்பான உணர்வு, சமூக மற்றும் பொருளாதார பிரச்சினைகள் தொடர்பான புரிந்துணர்வு மற்றும் உழைப்பின் அபிமானம் தொடர்பான உணர்வு என்பவற்றினை இளைஞர்களுக்கிடையே வலுப்படுத்தல்.
2. தேசிய அபிவிருத்தி முன்மொழிவுத் திட்டங்களில் இளைஞர்களின் பங்களிப்பினை ஏற்படுத்திக்கொள்ளல்.
3. இலங்கையிலும் மற்றும் ஏனைய நாடுகளிலும் உள்ள இளைஞர்களுக்கிடையே நட்புறவு மற்றும் பரஸ்பர புரிந்துணர்வு என்பவற்றினை ஏற்படுத்தல்.
4. இளைஞர்களுக்கிடையே போட்டித்தன்மை மற்றும் வெற்றி என்பன தொடர்பான உணர்வுகளை ஏற்படுத்துவதற்காக ஊக்குவித்தல்.
5. இளைஞர்களின் அறிவினை விரிவுபடுத்தல் மற்றும் அபிவிருத்தியுடன் தொடர்பான துறைகளில் பயிற்சியினை வழங்குதல்.
6. இளைஞர்களுக்கு இடையில் கலாச்சார இலக்கிய மற்றும் கலை ரீதியான செயற்பாடுகளை ஊக்குவித்தல்.
7. இளைஞர்களுக்கு இடையில் தேகாரோக்கியத்தின் விருத்தி மற்றும் விளையாட்டுத்துறை விருத்தி என்பவற்றிற்கான ஊக்குவிப்பினை வழங்குதல்.
8. இளைஞர்களுக்கு பொழுதுபோக்கு நடவடிக்கைகள் மற்றும் பொழுதுபோக்கினை வழங்குதல் தொடர்பான வசதிகளை வழங்குதல்.
9. அங்கவீன இளைஞர்களுக்கு உதவி செய்தல்.
10. அரசின் பொருளாதாரத் திட்டங்களை வலுப்படுத்தும் நோக்குடன், நீண்டகால கொள்கைகளின் அடிப்படையில் விளைதிறனுடைய வகையில் முதலீடு செய்வதன் ஊடாக இளைஞர்களுக்கு முறையான வேலை வாய்ப்பிற்கான சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொடுத்தல்.
11. கொள்கைகளை உருவாக்கும்போதும் மற்றும் நடைமுறைப்படுத்தும்போதும் இளைஞர்களின் பங்களிப்பிற்கான சந்தர்ப்பங்களை வழங்குதல்.
12. இளைஞர் அமைப்பினைத் தாபித்தல் மற்றும் இளைஞர்களின் நலன்புரிக்காக ஏற்கனவே தாபிக்கப்பட்டு உள்ள அமைப்புக்களுக்கு உதவுதல்.
13. இளைஞர் சேவைகளின் பரவலினைத் திட்டமிடல், ஒன்றிணைத்தல், மேம்படுத்தல் மற்றும் செயற்படுத்தல்.
14. ஒவ்வொவ்வொரு இளைஞர்களுக்கும் உரித்தான இயல்பான பண்புகளை விருத்தி செய்தல்.

.

1. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்.

இலங்கை நாட்டின் இளைஞர் யுவதிகளின் முழுமையான விருத்தியினை உறுதிப்படுத்த முடியுமான வகையில் அவர்களது சுய விருப்பங்களை மேம்படுத்துவதற்காக தாபிக்கப்பட்டுள்ள ஒரேயொரு அரச நிறுவனம் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஆகும்.

<u>தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினைத் தாபிப்பதற்குரிய பாராளுமன்றச் சட்டங்கள்</u> :-

- 1967 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க சுயாதீன தேசிய இளைஞர் சேவைகள் சட்டம்
- 1968 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க சுயாதீன தேசிய இளைஞர் சேவைகள் (திருத்த) சட்டம்
- 1969 சனவரி 23 ஆந்திகதிய 14837/6 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் சட்டத்தின் 26 ஆவது பந்திக்கு அமைய ஒழுங்கு விதிகள் கோவையினை வெளியிடுதல்.
- 1979 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க தேசிய இளைஞர் சேவைகள் சட்டம்.
- 1979 டிசம்பர் 20 ஆந்திகதிய 67/09 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் 1967 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க சுயாதீன தேசிய இளைஞர் சேவைகள் (திருத்த) சட்டத்தினை இரத்து செய்தல் மற்றும் 1979 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க தேசிய இளைஞர் சேவைகள் சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் தினத்தினை வெளியிடுதல்.
- 1980 சனவரி மாதம் 02 ஆந்திகதிய 69/09 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் 1979 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க தேசிய இளைஞர் சேவைகள் சட்டத்தின் 34 ஆவது பிரிவின் கீழ் ஒழுங்கு விதிகள் கோவையினை வெளியிடுதல்.
- 1986 மார்ச் மாதம் 10 ஆந்திகதிய 392/05 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் 1979 ஆம் ஆண்டின் தேசிய இளைஞர் சேவைகள் சட்டத்தின் 34 ஆவது பிரிவின் கீழ் 1986, 01 ஆம் இலக்க தேசிய இளைஞர் சேவைகள் கட்டளைகளை வெளியிடுதல்.
- 1990 புனர்வாழ்வு ஆணையாளர் நாயக அலுவலகத்தினை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு உள்ளீர்ப்புச் செய்தல்.
- 2011 ஆம் ஆண்டில் ஸ்ரீ லங்கா யூத் எண்ணக்கருவின் ஆரம்பம்

1978 ஆம் ஆண்டில் இளைஞர் விவகார மற்றும் தொழில் வாய்ப்புக்கள் அமைச்சு தாபிக்கப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க தேசிய இளைஞர் சேவைகள் சட்டத்தின் கீழ் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு முன்னரிலும் பார்க்க விரிவான அதிகாரங்களுடன் கூடிய இளைஞர் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு வாய்ப்புக்கள் கிடைத்தன.

1.1. ஒழுங்கு கட்டமைப்பு



Organizational Structure prepared according to the Re-structuring of Divisions of 2022

1.2. மன்றத்தின் பணிப்பாளர் சபையின் பெயர்ப் பட்டியல்

2022 ஆம் ஆண்டின் மே 31 ஆம் திகதி வரை மன்றத்தின் பணிப்பாளர் சபையின் பெயர்ப் பட்டியல்

தொடர் இலக்கம்	பெயர்ப் பட்டியல்	பதவி
01.	திரு. தமித விக்ரமசிங்ஹ 2022.05.31) சேவை முடிவுருத்தப்பட்டு உள்ளது.)	தலைவர் / பணிப்பாளர் நாயகம்
02.	திருமதி. டபிள்யூ.ஏ.ஜே.சி.விக்ரமஆரச்சி 2022.03.02)சேவை முடிவுருத்தப்பட்டு உள்ளது.)	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
03.	திரு. பிரதீப் கமச்சிகே 2022.03.23)ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டு உள்ளார்.)	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
04.	திரு. விமல் எஸ்.கே. லியனகம	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
05.	திரு. ரஞ்ஜித் சந்திரசேகர	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
06.	திரு. எம்.எச்.ஜி. பண்டார	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
07.	திரு. சஹன் த சில்வா 2022.01.05)ஆம் திகதி இராஜினாமா செய்துள்ளார்.(	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
08.	திரு. சஞ்ஜீவ ருவன் பதிரன	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
09.	திரு. எஸ்.ஏ.அத்துல சாந்த	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
10.	திரு.ஹேமந்த சிறீலால்	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
11.	திரு. எல்.பீ.இஸங்க சதுரங்க	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
12.	திரு. பி.எச்.ஏ.டீ. மதுஷங்க	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
13.	திருமதி. சரிதா பிரியதர்ஷனி பீரிஸ்	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
14.	திரு. டி.பி.மஹேஷ் ப்ரமுதித்த	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
15.	திரு. தமித் ரணசிங்ஹ	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
16.	திருமதி. டீ.எச்.என்.வீரசேகர	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
17.	செல்வி. ஏ.சுபானி சதீஷா	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
18.	செல்வி ரெஹானி இமாரா	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
19.	செல்வி. எச்.டீ.என்.குமாரி திலகரத்ன	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
20.	திரு. சுமுது ஏக்கநாயக்க	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
21.	திரு.சூ. பண்டார கருணாரத்ன	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
22.	திரு. தமித் லொகு பண்டார	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
23.	திருமதி துஷாந்தி ஹபுகொட	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
24.	திரு. கே.எல்.கெலும் பிரியங்கர	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
25.	திரு. எம்.ஏ.எம்.சி.எஸ். சிறிவர்தன	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்

<u>2022 ஆம் ஆண்டின் யூன் மாதம் தொடக்கம் மன்றத்தின் பணிப்பாளர் சபையின் பெயர்ப் பட்டியல்</u>

தொடர் இலக்கம்	பெயர்ப் பட்டியல்	பதவி
01.	கலாநிதி, திரு. திரான் சிரிபத் த சில்வா 2022.06.14)ஆம் திகதி சேவை முடிவுருத்தப்பட்டு உள்ளது)	தலைவர் / பணிப்பாளர் நாயகம்
02.	சிரேஷ்ட விரிவுரையாளர், திரு.ரவீந்திர சமரவிக்ரம 2022.06.15)ஆம் திகதி பதிற் கடமைக்காக நியமனம் செய்யப்பட்டு உள்ளார்) 2022.09.11) ஆம் திகதி சேவை முடிவுருத்தப்பட்டு உள்ளது)	தலைவர் / பணிப்பாளர் நாயகம்
03.	கலாநிதி, திரு. திரான் சிரிபத் த சில்வா 2022.09.12) ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டு உள்ளார்)	தலைவர் / பணிப்பாளர் நாயகம்
04.	திரு. பிரதீப் கமச்சிகே	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
05.	திரு. விமல் எஸ்.கே.லியனகம 2022.10.07)ஆம் திகதி முதல் வேறு அமைச்சு ஒன்றிற்கு இடமாற்றம் செய்யப்பட்டு உள்ளார்.)	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
06.	திரு. ரஞ்ஜித் சந்திரசேகர	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
07.	திரு. எம்.எச்.ஜி. பண்டார	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
08.	பேராசிரியர், திரு. சிசில் குமாரவடு	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
09.	பேராசிரியர், திரு. ரஞ்ஜித் பிரேமலால்	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
10.	கலாநிதி திரு. அமல் கிரிஷாந்த இலேசிங்ஹ	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
11.	மருத்துவர் திரு. நிலங்க ஆசிரி வீரசிங்ஹ	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
12.	மருத்துவர், திரு. பிரியந்த பெரேரா	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
13.	சட்டதரணி. திரு.மகேஷ் (கொட்டுவெல்ல)2022.0816 ஆம் திகதி சேவை முடிவுருத்தப்பட்டு உள்ளது)	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
14.	சட்டதரணி, திரு.மதுர வெல்கம	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
15.	திரு.மேஜர் ஜெனரால் (ஓய்வு பெற்ற) திரு. ராஜித அம்பேமொஹொட்டி	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
16.	திரு. தரங்க நலீன் கம்லத்	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
17.	திரு.ஹேமந்த சிறீலால்	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
18.	திரு. எல்.பீ.இசங்க சதுரங்க	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
19.	திரு. திலக் கந்தேகம	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
20.	திரு. பீ.எச்.எஸ்.கே. சந்திம	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
21.	திரு. ஜானக அமரசிங்ஹ	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
22.	திரு. பிரதீப் மாபலகம	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
23.	திரு. வசந்த துக்கன்னாரால	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
24.	திரு. சுதீர ராஜபக்ஷ	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
25.	திருமதி. சுஜானீ போகொல்லாகம	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
26.	திரு. எல்.பி.வீ. எரந்த லியனகே	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்
27.	திரு. துஷ்யந்த விதூஷக மஹபதுகே 2022.0)8.16 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டு உள்ளார்.	மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்

2. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள்

1. திரு. பிரதீப் கமச்சிகே, - தலைவர்
   பணிப்பாளர்,
   தேசிய வரவுசெலவுத் திணைக்களம்.

2. திரு.ஜானக அமரசிங்ஹ, - உறுப்பினர்
   கருத்திட்டப் பணிப்பாளர்,
   சிறு தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் புனர்வாழ்வுக் கருத்திட்டம்

3. திரு. தரங்க நலின் கம்லத் - உறுப்பினர்
   தலைவர்
   தேசிய பயிலுநர் மற்றும் தொழிநுட்பப் பயிற்சி அதிகாரசபை

4. டபிள்யூ.பி.டி.எம்.ஜே. பெரேரா – கண்காணிப்பாளர்
   பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்
   விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு

5. திருமதி.எச்.கே.ஐ. கயானி - அதிதி
   கணக்காய்வு அத்தியட்சகர்
   தேசிய கணக்காய்வு அலுவலகம்

6. திருமதி. சீ.கே. ஹேரத் -செயலாளர்/ அழைப்பவர்
   உள்ளகக் கணக்காய்வாளர்
   தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்.

மூலம் – உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், மஹரகம.

3. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வரவுகள் மற்றும் செலவுகள் தொடர்பான விபரம்

3.1. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடுகளின் வரவுகள் தொடர்பான விபரங்கள்

(ரூ 000)

		2022
திறைசேரிகள்		
	மீண்டெழும் மூலதனங்கள்	1,174,969 81,914.6
மொத்த திறைசேரி ஒதுக்கீடுகள்		1,256,883.6
அமைச்சுக்கள்		
	மீண்டெழும் மூலதனங்கள்	39,591.19 110.51
அமைச்சின் மொத்த ஒதுக்கீடுகள்		39,701.70
மாகாண சபைகள்		
	மீண்டெழும் மூலதனங்கள்	-
வெளிநாட்டு அமைப்புக்கள்		
	மீண்டெழும் மூலதனங்கள்	60,861.7 -
வெளிநாட்டு அமைப்புக்களின் மொத்த வரவுகள்		60,861.7
ஏனைய வெளிவாரியான நிறுவனங்களின் வரவுகள்		
	மீண்டெழும் மூலதனங்கள்	4094.5 109.4
ஏனைய வெளிவாரியான நிறுவனங்களின் வரவுகள்		4203.9
மொத்த அமைச்சுக்கள், வெளிவாரியான நிறுவனங்கள், வெளிநாட்டு அமைப்புக்களின் வரவுகள்		104,767.3
உள்ளக வருமானங்கள்		230,558.53

3.2. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடுகளின் செலவுகள்

(ரூ 000)

		2022
திறைசேரிகள்		
	மீண்டெழும் மூலதனங்கள்	1,174,969 81,914.6
மொத்தத் திறைசேரிக் கொடுப்பனவுகள்		1,256,884
		அமைச்சு
	மீண்டெழும் மூலதனங்கள்	45,624.2 110.51
மொத்த அமைச்சுக் கொடுப்பனவுகள் 45734.73		
மாகாண சபைகள்		
	மீண்டெழும் மூலதனங்கள்	-
மொத்த மாகாண சபைக் கொடுப்பனவுகள் -		
வெளிநாட்டு அமைப்புக்கள் -		
	மீண்டெழும் மூலதனங்கள்	49067.59 1611.52
மொத்த வெளிநாட்டு ஒழுங்கமைப்புக் கொடுப்பனவுகள் 50679.11		
ஏனைய வெ ளிவாரியான நிறுவனங்களின் செலவு		
	மீண்டெழும் மூலதனங்கள்	2,207.80 109.41
மொத்த ஏனைய வெ ளிவாரியான நிறுவனங்களுக்கான கொடுப்பனவுகள் 2,317.20		
உள்ளக ஈட்டல் செலவு	மீண்டெழும்	33923.3
	அபிவிருத்தி	169372.7
	மூலதனங்கள்	2103678
		2306974.0

3.3 தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு திறைசேரி, உள்ளக பண ஈட்டல்கள் மற்றும் ஏனைய வெளிவாரியான நிறுவனங்களின் ஊடாக நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் ஒதுக்கீடுகளின் மூலம் ஏற்கப்பட்ட நிருவாக மற்றும் அபிவிருத்திச் செலவுகள் (ரூபா மில்லியன்கள்)

2016 – 2022

ஆண்டு	2016	2017	2018	2019	2020	2021	2022
அபிவிருத்தி	768	1212	1115	575	427	488	488
நிருவாகம்	1014	1075	1124	1309	1223	1240	1239

அபிவிருத்தி மற்றும் நிருவாகச் செலவுகள்



3.4 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய செலவுகளின் சாராம்சம் - 2022

தொடரிலக்கம்	நிகழ்ச்சிதிதிட்டம்	ஒதுக்கப்பட்ட தொகை (ரூ.மி.)		செலவிடப்பட்ட தொகை (ரூ.மி.)	
		திறைசேரிகள்	அமைச்சுக்கள்	திறைசேரிகள்	அமைச்சுக்கள்
1.	நுண்கலைத் திறன்கள் அபிவிருத்திச் நிகழ்ச்சித் திட்டங்கள்	12.71		14.196	
2.	விளையாட்டுத்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	12.00		25.154	
3.	ஊடகப் பிரச்சாரங்கள் மற்றும் நிஸ்கோ வீடியோ நிகழ்ச்சித்திட்டங்கள்	4.00		3.730	
4.	தொழிலினை எதிர்கொள்ளல் தொடர்பான பாடநெறி நிகழ்ச்சித்திட்டங்கள்	8.50		14.925	
5.	பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்	5.00		2.792	
6.	தொழில் சார் வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைச் சேவை நிகழ்ச்சித்திட்டங்கள்	1.00		0.211	
7.	இளைஞர் பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	10.00		8.190	
8.	இளம் தொழில் முயற்சியாளர்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	4.60		1.365	
9.	ஆராய்ச்சிகள், செயலாற்றுகை மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்	1.50		2.729	
10.	மனித வளக் கொள்ளளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்	0.39		0.024	
11.	தகவல் தொழிநுட்ப நிகழ்ச்சித் திட்டங்கள்	1.80		0.799	
12.	சர்வதேச இளைஞர் தொடர்பு நிகழ்ச்சித்திட்டங்கள்	6.00		2.368	
13.	இளைஞர் பரிசு வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்கள்	2.50		1.189	
14.	மூலதனப் பொருட்களை எடுத்துக் கொள்ளல்	0		0	
15.	நிர்மாணிப்புக்கள், பராமரிப்புக்கள் மற்றும் பழுதுபார்த்தல்கள்	0		4.027	
16.	இளைஞர் பாராளுமன்ற நிகழ்ச்சித்திட்டம்		9.300		4.000
17.	இளைஞர்களின் எதிர்பார்ப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்		4.600		2.642
18.	போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்		1.000		0.357
	மொத்தம்	**70.00**	**14.900**	**81.70**	**7.000**

4. அபிவிருத்திச் செயற்பாடுகள் – 2022

இளைஞர் அபிவிருத்தி முன்னேற்றம் 2022.12.31 ஆம் திகதியன்று

தொடரிலக்கம்	நிகழ்ச்சித்திட்டம்	இலக்கு		முன்னேற்றம்	
		நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	பங்குபற்றியவர்கள்	நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	பங்குபற்றியவர்கள்
01.	கலைத் திறன்கள் அபிவிருத்திச் நிகழ்ச்சித் திட்டங்கள்	02	305	02	249
02.	சர்வதேச இளைஞர்களின் தொடர்புகள் சார் செயற்பாடுகள்	03	54	02	46
03.	தொழில் சார் வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனை வழங்கல்	32	19,700	32	24,322
04.	இளைஞர் பரிசு வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்கள்	04	225	04	233
05.	விளையாட்டுத்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்	04	180	3	38
06.	கைத்தொழில் மற்றும் தொழில்சார் பயிற்சிச் செயற்பாடுகள் (தொழில் எதிர்நோக்குதல் தொடர்பான) நிகழ்ச்சித் திட்டங்கள்	255	21,840	259	19,316
07.	பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்	317	18,600	305	17,250
08.	தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் தொழில் தோற்றுவாய் நிகழ்ச்சித்திட்டங்கள்	420	4,985	254	3,599
09.	இளைஞர் பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	19	0	19	0
10.	பிரச்சாரம் மற்றும் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்	177	0	230	0
11.	தகவல் தொழிநுட்ப நிகழ்ச்சித்திட்டங்கள்	1	100	-	-
12.	மனித வளக் கொள்ளளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்	8	100	3	104
13.	நிர்மாணிப்புக்கள், பராமரிப்புக்கள் மற்றும் புதுப்பித்தல்கள்	01	0	0	0
14.	பெறுகைகள்	01	0	0	0
15.	இளைஞர் பாராளுமன்ற நிகழ்ச்சித்திட்டம்	12	1,157	20	1,358
16.	இளைஞர் எதிர்பார்ப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்	14,395	291,010	11,035	277,396
17.	போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்	10	350	07	262

4.1. நுண்கலைத்திறன் அபிவிருத்திச் செயற்பாடுகள்

01. நுண்கலை நிலையங்களின் அபிவிருத்தி.

நோக்கம் – கலைத்துறையினை விருத்தி செய்வதன் ஊடாக சாதகமான சமூகம் ஒன்றினைக் கட்டியெழுப்புதல்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடாக பெல்வூட் கலா நிலையம், எரமினியாய கலா நிலையம் மற்றும் படங்கல கலா நிலையம் என்பவற்றில் இசை மற்றும் நடனம் ஆகிய பிரிவுகள் தழுவப்படும் வகையில் டிப்ளோமாப் பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன. 03 வருட கால முறையான டிப்ளோமாப் பாடநெறி ஒன்றாக கோட்பாட்டு ரீதியான மற்றும் செயன்முறை ரீதியான செயற்பாடுகளை உள்ளடக்கிய பயிற்சி ஒன்றினை வழங்குவதன் ஊடாக பயிலுநர்களின் கலை சார் அறிவினை விருத்தி செய்தல் மேற்படி கருத்திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தக் கலைப் பாடநெறிக்காக பெல்வூட் கலா நிலையத்தில் 59 பயிலுநர்களும், படங்கல கலா நிலையத்தில் 52 பயிலுநர்களும், எரமினியாய கலா நிலையத்தில் 77 பயிலுநர்களும், என்ற வகையில் 188 பயிலுநர்கள் பாடநெறியினைக் கற்றனர்.

02. நாடகங்கள் மற்றும் நடனக் கலைகள் டிப்ளோமாப் பாடநெறி.

நோக்கம் – சிரேஷ்ட மற்றும் திறமை வாய்ந்த இளம் நாடகக் கலைஞர்களை உள்ளடக்கிய விரிவுரையாளர்களின் ஆலோசனையில் இளம் நாடகக் கலைஞர் குழு ஒன்றிற்கு தேசிய மட்டத்திற்கு வருவதற்கான வழிகாட்டல்களை வழங்குதல்.

நாடகக் கலையினை விரும்பும் அது தொடர்பில் மிகவும் ஆர்வம் உள்ள நாடு பூராகவும் பரந்து காணப்படும் இளைஞர் யுவதிகளின் திறன்களை விருத்தி செய்தல் இதனூடாக எதிர்பார்க்கப்படுகின்றது. நடித்தல், தயாரிப்பு, படைப்பாக்கம், ஒப்பனை ஒழுங்கமைப்பு, பின்னணி ஆக்கம் ஆகிய பரந்த துறைகளின் ஊடாக அறிவினை வழங்கி கலைஞர் ஒருவரினை உருவாக்குதல் மேற்படி ஆறு மாத காலப் பாடநெறியின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. இந்தப் பாடநெறியினை 35 பயிலுநர்கள் கற்றனர்.

03. ஸ்ரீ லங்கா யூத் நடன மற்றும் இசைக் குழு

நோக்கங்கள் – தேர்ச்சி மிகு மற்றும் விஷேட திறமைகளைக் கொண்ட இளைஞர் சமூகத்தை இணைத்துக்கொண்டு தேசிய மட்டத்தைத் தாண்டிய சர்வதேச மட்டத்திலான கலாச்சார அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு இலங்கையின் ஆக்கபூர்வமான இளைஞர்களுக்கு சந்தர்ப்பத்தினை வழங்குதல்.

தற்போது தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கீழ் மஹரகம பிரதான அலுவலக வளாகத்தினைச் சார்ந்த வகையில் இலங்கை யூத் இசைக்குழு ஒன்றும் மற்றும் நடனக் குழு ஒன்றும் வெற்றிகரமாக இயங்கி வருவதுடன் மேற்படி குழுக்கள் வெளிவாரியான கலை நிகழ்ச்சிகள், வெளியரங்குகளில் இசைக்கச்சேரிகள் மற்றும் வெளிநாட்டு சுற்றுப்பயணங்கள் என்பவற்றில் பங்குபற்றுவதுடன், அதனூடாக இந்தக் குழுக்களில் உள்ள இளைஞர் யுவதிகளுக்கு பொருளாதாரப் பெறுமதி ஒன்றும் சேர்ந்து உள்ளது.

இலங்கை யூத் இசைக் குழுவிற்காக 20 இளைஞர் யுவதிகளும், 2022 ஆம் ஆண்டில் இணைந்து கொண்டனர்.

சர்வதேச இளைஞர் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள்

இலங்கை இளைஞர்களின் மொழித் திறன்கள் (ஆங்கில இலக்கணம் மற்றும் பேச்சு) தலைமைத்துவத் திறன்கள்/ குழுச் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்தல் என்பவற்றின் ஊடாக புதிய மில்லேனியத்திற்குப் பொருந்தும் வகையில் தொழிநுட்ப அறிவு மற்றும் ஆற்றல்களுடன் கூடிய முழுமையான இளைஞர் ஒருவரைத் தோற்றுவித்தல் தேசத்தின் சுபீட்சத்தைக் கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பினை வழங்கும் இளைஞனின் திறன்கள், அறிவு மற்றும் உளப்பாங்குகள் என்பவற்றை சர்வதேசத்திற்குக் கொண்டு செல்வதற்கான வாய்ப்பினை வழங்குதல், உலகளாவிய ரீதியில் இளைஞர் யுவதிகளுக்கு இடையில் அனுபவங்கள் மற்றும் அறிவு என்பவற்றினைப் பகிர்ந்து கொள்வதற்கு உரிய சந்தர்ப்பத்தினை வழங்குதல் மற்றும் இனங்களுக்கு இடையில் சமூக விஞ்ஞான, பொருளாதார மற்றும் கலாச்சார நிலைமைகளை விருத்தி செய்தல் ஆகிய நடவடிக்கைகள் இதனூடாக எதிர்பார்க்கப்படுகின்றன. அதன் கீழ் 2022 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிடப்பட்டு உள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் இந்தப் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

1. **சர்வதேச இளைஞர் கருத்தரங்குகள், சம்மேளனங்கள், கலாச்சார நிகழ்ச்சிகள் மற்றும் செயலமர்வுகளுக்காக இலங்கை இளைஞர்களின் செயற்பாட்டு ரீதியான பங்குபற்றலினை வழங்குதல்.**

தெற்காசியாவில் உள்ள நாடுகள் உட்பட பல வெளிநாடுகள் சர்வதேச மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் பட்டறைகளுக்கு இலங்கை இளைஞர்களை அமைக்கின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் இலங்கையின் இளைஞர் கழகங்களினால் தெரிவசெய்யப்பட்ட திறமையான இளைஞர்களுக்கு இந்த நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்படும். இதனால் புதிய தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப இலங்கை இளைஞர்களின் அறிவு, திறமை, அணுகுமுறைகள், நிபுணர் ஆலோசகர்கள் உருவாகும்.

2. Global Leader Programme (**சர்வதேச இளம் தலைவர்களைப் பயிற்றுவித்தல்**)

தேசியத்துவத்தைப் பாதுகாத்து சர்வதேசத்தை வெற்றி கொள்வதற்காக ஒழுக்க நெறியுள்ள சிறந்த பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்கள், ஒழுக்க நெறிமுறைகள், தனியாள் விருத்தி, மொழி ஆற்றல், சிறந்த ஆளிடைத் தொடர்புகள் என்பவற்றினைக் கொண்ட வலுமிக்க இலங்கைய இளைஞர்களுக்காக தேவையான பயிற்சியினை வழங்குதல். உலகில் நவீன தொழில்துறை வாய்ப்புக்கள் மற்றும் நவீன தொழிநுட்பத்திற்கு அமையக் கிடைக்கப்பெறும் பல்வேறு சர்வதேச நிகழ்ச்சித் திட்டங்களுக்காக முன்வரக்கூடிய இளைஞர்களைத் தோற்றுவித்தல் இதன் நோக்கங்கள் ஆகும். அதற்கு அமைய 2022.03.02 முதல் 12 ஆம் திகதி வரை 45 இளைஞர் யுவதிகளுக்காக அத்துருகிரிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தில் 10 நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றும் மற்றும் 2022.05.08 ஆம் திகதி 25 இளைஞர் யுவதிகளின் பங்களிப்பில் கில்கிஸ்ஸ கடற்கரையில் கடற் கரையினை சுத்தம் செய்யும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றும் நடாத்தப்பட்டன.

2022 ம் வருடம் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்சித்திட்டங்கள்

நிகழ்ச்சித்திட்டம்	திகதி	இடம்	உரிய நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	பங்குபற்றியவர்களின் உரிய எண்ணிக்கை	உண்மையான நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	பங்குபற்றியவர்களின் உண்மையான எண்ணிக்கை
இளைஞர் அபிவிருத்தித் துறையில் விஷேட திறமை மற்றும் அனுபவத்தினைப் பரிமாறிக்கொள்ளல்	2022.02.20 – 2022.03.07	Turkey	01	02	01	01
சர்வதேச தலைமைத்துவ நிகழ்ச்சித்திடம்	2022.03.02 - 12	அத்துருகிரிய தேசிய பெருந்தோட்டத்துறை முகாமைத்துவ நிறுவனம்	01	50	01	45
நிகழ்ச்சித்திட்டம்	**திகதி**	**இடம்**	**உரிய நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை**	**பங்குபற்றியவர்களின் உரிய எண்ணிக்கை**	**உண்மையான நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை**	**பங்குபற்றியவர்களின் உண்மையான எண்ணிக்கை**
இலங்கை இளைஞர் பாலம் நிகழ்ச்சித்திட்டம்	2022.04.29	Sri Lanka Russian Centre			01	40
சர்வதேச தலைமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கடற்கரையினை சுத்தம் செய்யும் நிகழ்ச்சித்திட்டம்	2022.05.28	Mount Lavinia Beach Area			01	25
70 ஆவது யப்பான நட்புறவு நிகழ்ச்சித்திட்டம்	2022.09.06	தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பிரதான அலுவலகம்	--	--	01	800
New Generation Award 2022 ஊடகக் கலந்துரையாடல்	2022.09.22	தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பிரதான அலுவலகம்	--	--	01	80
Youth Road to COP 27 & Beyond	2022.10.29	தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பிரதான அலுவலகம்	--	--	01	45
பொதுநலவாய நாடுகள் சபையின் II ஆவது இளைஞர் பாராளுமன்றம்		ட்ரினிடாட்-டுபேக்போ	--	--	01	02

4.2. இளைஞர் அமைப்புக்களின் அபிவிருத்திச் செயற்பாடுகள்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக தேவையான இளைஞர் அணியினை ஒழுங்குபடுத்தல், அவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்ட இளைஞர்களுடன் அவர்களது அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக கூடிய பயனுறுதி உள்ள வகையில் மேற்படி அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான சூழலினை அமைத்தல் மற்றும் அவ்வாறே இந்த நாட்டில் செயற்படும் இளைஞர் அமைப்புக்களுக்கு தமது சேவைகளை மிகவும் பயனுறுதியுள்ளதாகவும் மற்றும் வினைத்திறனுடையதாகவும் மேற்கொள்வதற்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திடம் காணப்படும் பலங்களின் ஊடாக மேற்படி அமைப்புக்களை வலுவூட்டல் என்பன இளைஞர் அமைப்புக்கள் அபிவிருத்திப் பிரிவின் பிரதான கடமைப் பொறுப்பாகும்.

இந்நாட்டு இளைஞர்களின் தலைமைத்துவம் மற்றும் ஆளுமை விருத்தி, இளைஞர் அமைப்பு ஒன்றாக இளைஞர் கழக வியாபாரத்தின் அபிவிருத்தி, அவர்களை தீர்மானம் மேற்கொள்ளும் நடைமுறைக்கு செயலூக்கத்துடன் பங்குபற்ற வைத்தல், நாட்டில் வசிக்கும் சகல இனங்களுக்கு இடையிலும் ஒற்றுமை மற்றும் நட்புறவு என்பவற்றினை விருத்தி செய்தல் போன்ற இலக்குகளை வெற்றியடையச் செய்யும் பொருட்டு பல்வேறு கருத்திட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக பங்களிப்பினை வழங்குவதும் மேற்படி பிரிவினால் மேற்கொள்ளப்படும்.

<u>2022 ஆம் ஆண்டிற்குள் தாபிக்கப்பட்ட இளைஞர் கழகங்களின் முன்னேற்றம்.</u>

தொடரிலக்கம்	நிகழ்ச்சித்திட்டம்	நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	பங்குபற்றியவர்கள்
1.	இளைஞர் கழகங்களைத் தாபித்தல்	10918	266601
2.	பிரதேச சம்மௌனம் தாபித்தல்	326	22490
3.	மாவட்ட சம்மௌனம் தாபித்தல்	24	1829
4.	தேசிய சம்மௌனம் தாபித்தல்	01	52

2022 ஆம் ஆண்டில் இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்டுஉள்ள இளைஞர் கழகங்கள் தொடர்பான விபரங்கள்.

தொடரிலக்கம்	மாவட்டம்	பிராந்திய சபைகளின் எண்ணிக்கை	கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை	உறுப்பினர்களின் எண்ணிக்கை (ஆவணங்களுக்கு அமைய)	சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்டு உள்ள இளைஞர் கழகங்களின் எண்ணிக்கை
1.	கொழும்பு	08	454	6646	290
2.	கொழும்பு 1	08	98	2346	99
3.	கம்பஹா	13	1177	14507	825
4.	களுத்துறை	14	762	10635	511
5.	காலி	19	896	15920	696
6.	மாத்தறை	16	650	12400	570
7.	ஹம்பாந்தோட்டை	12	576	7799	404
8.	கண்டி	20	1188	18250	735
9.	மாத்தளை	11	539	7489	377
10.	நுவரெலியா	05	491	8964	359
11.	மொனராகலை	11	319	6248	266
12.	பதுளை	15	567	13034	482
13.	கேகாலை	11	573	12436	454
14.	இரத்தினபுரி	17	575	10903	427
15.	குருணாகல்	30	1610	28151	1193
16.	புத்தளம்	16	548	9059	469
17.	அநுராதபுரம்	22	694	12136	536
18.	பொலன்னறுவை	07	295	6298	235
19.	திருகோணமலை	11	230	6890	161
20.	மட்டக்களப்பு	14	345	16560	418
21.	அம்பாறை	20	503	15001	459
22.	வவுனியா	04	102	4220	129
23.	மன்னார்	05	153	7119	214
24.	கிளிநொச்சி	04	95	3423	123
25.	முல்லைத்தீவு	06	136	1857	76
26.	யாழ்ப்பாணம்	15	435	8310	410
	மொத்தம்	**335**	**14011**	**266601**	**10918**

<u>இளைஞர் அமைப்புக்கள் அபிவிருத்திப் பிரிவு நிகழ்ச்சித்திட்டங்களின் சாராம்சம் - 2022</u>

தொடரிலக்கம்	திகதி	நிகழ்ச்சித்திட்டம்	நடைபெற்ற இடம்	நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	பங்குபற்றியவர்கள்
01.	2021.11.01-2022.05.31	இளைஞர் கழகங்களைத் தாபித்தல்	சகல கிராம அலுவலர் பிரிவுகளிலும்	10918	266601
02.	2022.02.01-2022.05.31	பிரதேச சம்மேளனங்கள் தாபித்தல்	சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும்	326	22490
03.	2022.03.01-2022.05.30	மாவட்ட சம்மேளனம் தாபித்தல்	சகல மாவட்டங்களிலும்	24	1829
04.	2022.05.21	தேசிய சம்மேளனம் தாபித்தல்	தேசிய இளைஞர் நிலையத்தின் கேட்போர்கூடம் மஹரகம	01	52
05.	2022/2/01-02	தைப்பொங்கல் கொண்டாட்டம்	புத்தளம்	01	1200
06.		ஆளுமை விருத்தி ஊடாக மகிழ்ச்சிகரமான வாழ்க்கை ஒன்றினைக் கட்டியெழுப்புதல்	சகல மாவட்டங்களிலும்	07	500
07.		மாவட்ட சம்மேளனங்களுக்கு பொருட்களைப் பகிர்ந்தளித்தல்	சகல மாவட்ட சபைகளுக்கும்	01	130

4.3. தேசிய இளைஞர் விருது வழங்கல் செயற்பாடுகள்

எடின்பரோ பிரபு சர்வதேச இளைஞர் விருது வழங்கல் நிகழ்ச்சித்திட்டம் இலங்கை இளைஞர் யுவதிகளுக்காக நடைமுறைப்படுத்துதல் தேசிய இளைஞர் விருது வழங்கல் பிரிவின் பிரதான பணியாகும்.

.

எடின்பரோ பிரபு சர்வதேச இளைஞர் விருது வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் தத்துவம் அடிப்படையாகக் கொள்ளப்பட்டு உள்ளது நாகரிகமான சமூகம் நிலைத்து இருப்பது அந்தந்த உறுப்பினர்களின் சுதந்திரம் அறிவு,பொறுப்பு, நடத்தைகள் மற்றும் தரங்கள் என்பவற்றின் அடிப்படையில் ஆகும் எனும் நம்பிக்கையினை அடிப்படையாகக் கொண்டே ஆகும்.

மேற்படி தத்துவத்தினை அடிப்படையாகக் கொண்டு எடின்பரோ பிரபு சர்வதேச இளைஞர் விருது வழங்கல் நிகழ்ச்சித்திட்டம், இலங்கையின் 13-24 வயதுகளுக்கு இடைப்பட்ட பாடசாலை மாணவ மாணவிகள் மற்றும் இளைஞர் யுவதிகளின் உளப்பாங்குகள், அறிவு திறன்கள், அபிமானம், தன்னம்பிக்கை, உடல் மற்றும் உளச் சுகாதார விருத்தி என்பவற்றினை ஊக்குவிக்கும், இளைஞனை வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றாக 1980 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

கல்வி அமைச்சின் அனுமதியின் பேரில் பாடப்பரப்புடன் இணைந்த செயற்பாடுகளாக பாடசாலை மாணவர்களுக்காக நடைமுறைப்படுத்தப்படும் இந்த நிகழ்ச்சித்திட்டம் புதிய கல்வி மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் அரசின் சகல பாடசாலைகளையும் சார்ந்த வகையில் நடைமுறைப்படுத்துவதற்காக தேவையான அடுத்த கட்ட நடவடிக்கைகள் தற்போதாகும் போது ஆரம்பிக்கப்பட்டு உள்ளன.

மேற்படி இலக்குகள் நோக்கங்களை அடைந்து கொள்ளும் நோக்குடன் 2022 ஆம் ஆண்டில் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளதுடன், மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களுள் தெரிவு செய்யப்பட்ட சில புகைப்படங்கள் கீழே குறிப்பிடப்பட்டு உள்ளன.

- **2022.01.26 ஆம் திகதி எடின்பரோ பிரபு சர்வதேச விருது வழங்கல் வைபவம் 2019/2020/2021 ஆம் ஆண்டுகளுக்காக (இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு, டங்கன் வைட் கேட்போர் கூடம்)**

விருதின் வகை	பரிசினை எதிர்பார்த்துள்ளவர்களின் எண்ணிக்கை
வெண்கலம்	148
வெள்ளி	11
தங்கம்	14
மொத்தமாகப் பங்குபற்றியவர்கள்	**450**

- 2022 .12.15 – 16 ஆம் திகதிகளில் குருணாகல் எத்துகல்புர இளைஞர் விடுதிகள் மண்டபத்தில் நடைபெற்ற விருது வழங்கல் தலைமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.

- 2022.12.23- 27 ஆம் திகதி தங்க விருது மற்றும் வெள்ளி விருது எதிர்பார்ப்பாளர்களின் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம் லபுதுவ பண்ணையினைச் சார்ந்த வகையில்

4.4. விளையாட்டு அபிவிருத்திச் செயற்பாடுகள்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வருடாந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுள் விளையாட்டுத்துறை நிகழ்ச்சித்திட்டங்கள் இளைஞர்களுக்கு மிகவும் பயனுறுதியுள்ள வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளன. மொத்த இலங்கைய இளைஞர் கழக உறுப்பினர்களினதும் விளையாட்டுத்துறைத் திறன்களை கிராமிய மட்டம் தொடக்கம் தேசிய மட்டம் வரை மேலுயர்த்தி வைப்பதற்காக ஆண்டு பூராகவும் பல்வேறு விளையாட்டுத்துறை நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், அதனூடாக அவர்கள் உடல் மற்றும் உள ரீதியாக ஆரோக்கியமான மற்றும் வலுவான இளைஞர் ஒருவரை உருவாக்கி அவர்களுள் தோற்றுவிக்கப்படும் இளமையின் சக்தியினை தேசிய அபிவிருத்திப் பாய்ச்சலிற்கு விடுவிக்க இயலுமாகியமை நாம் பெற்ற வெற்றியாகும். ஆரோக்கியமான இலங்கை நாட்டு இளைஞர் சமுதாயம் ஒன்றினை உருவாக்கும் முன்னோடியாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு ஒத்துழைப்பினை வழங்குவதனை பிரதான நோக்காகக் கொண்ட விளையாட்டுத்துறை அபிவிருத்திப் பிரிவானது 2022 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிடப்பட்டு உள்ள கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது.

- **இளைஞர் சேவைகள் விஷேட விளையாட்டுக் குலாம் நிகழ்ச்சித்திட்டம் – ஹெய்யந்துடுவ பயிற்சி நிலையம்**

வொலிபோல் மற்றும் கபடி விளையாட்டிற்காக தேசிய மட்டத்தில் திறன்மிகு வீரர் வீராங்கனைகளைப் பயிற்றுவிக்கும் நோக்கில் ஹெய்யந்துடுவ பயிற்சி நிலையத்தினை மையமாகக் கொண்டு மேற்படி விளையாட்டுக் குலாம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டது.

தொடரிலக்கம்	விளையாட்டுக் குலாம்	ஆண்டிற்குள் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை
01	வொலிபோல்	27
02	கபடி (ஆண்கள்)	14

“உலகை வெல்லும் நாங்கள்” கருத்திட்டம் (வெளிவாரியான ஒதுக்கீடுகள் கிடைக்கப் பெறுவதன் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டது.)

“உலகை வெல்லும் நாங்கள்” கருத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள்

தொடரிலக்கம்	நிகழ்ச்சித்திட்டம்	பங்குபற்றியவர்கள்
01	மாகாண மட்டத்தில் 09 விளையாட்டுத்துறைப் பயிற்சி முகாம்களை நடைமுறைப்படுத்தல்	933
02	இளைஞர் அலுவல்கள் துறையில் கடமை நடவடிக்கைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கான அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்	550
03	இளைஞர் கழக வியாபாரத்துடன் தொடர்பான இளம் தலைவர் தலைவிகளுக்காக நடாத்தப்பட்ட விளையாட்டுத்துறை மற்றும் தலைமைத்துவப் பயிற்சி முகாம்	149
04	யப்பான் இலங்கை விளையாட்டுத்துறை மற்றும் கலாச்சார ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டம்	1500

- **இளைஞர் சேவைகள் விளையாட்டு சமூக நிகழ்ச்சித்திட்டம்**
-

பிரதான அலுவலகத்தின் இளைஞர் மத்திய நிலையங்களை மையமாகக் கொண்டு 17 விளையாட்டு நிகழ்ச்சிகளைப் பயிற்றுவிப்பதனை நோக்காகக் கொண்டு பகுதி நேர நிகழ்ச்சித்திட்டம் ஒன்றாக இந்தக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதுடன், அதன் பங்குபற்றல் தொடர்பான விரிவான தகவல்கள் கீழ்வருமாறு அமையும்.



4.5. தொழிநுட்ப மற்றும் தொழில்சார் பயிற்சிச் செயற்பாடுகள்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் சகல தொழிற் பயிற்சி மத்திய நிலையங்களையும் தர முகாமைத்துவச் சான்றிதழ் கிடைக்கப்பெற்ற பயிற்சி வழங்கும் மத்திய நிலையங்கள் என்ற நிலையினை அடையச் செய்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தேர்ச்சிகளுக்கு ஏற்ப பயிற்சியினை வழங்கி தேசிய தொழிற் பயிற்சிகள் தகைமைச் சான்றிதழினைப் பெற்ற பயிற்சி பெற்ற ஊழியர்களைத் தோற்றுவித்தல் இதனூடாக மேற்கொள்ளப்படுகின்றது.

<u>பயிற்சி நிலையங்களின் தகவல்கள்</u>

- மத்தியநிலையங்களின் எண்ணிக்கை – 56
- பாடநெறிகளின் எண்ணிக்கை – 108
  (முழு நேர -43, பகுதி நேர-65)
- பாடநெறிகளைப் பூர்த்தி செய்த பயிலுநர்களின் எண்ணிக்கை - 15,683 (வருடாந்தம்)
- NVQ மட்டம் - III, IV , V

பாடநெறிகளின் கால எல்லை – 06 மாதங்கள், 01 வருடம், 02 வருடங்கள்

பயிலுநர்களை இணைத்துக்கொள்ளல் – 2022 (மாகாண மட்டத்தில்)

மாகாணம்	பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	ஆட்சேர்ப்புக்கள்	பூர்த்தி செய்தவர்களின் எண்ணிக்கை	தற்போது பயிற்சி பெறும் பயிலுநர்கள்
மேல்	314	7987	6873	-
தென்	77	1604	1366	-
சப்ரகமுவ	25	468	386	-
ஊவா	12	177	142	-
வடமேல்	60	1686	1383	-
மத்திய	103	2949	2718	19
வட மத்திய	45	937	814	-
கிழக்கு	77	2403	1918	-
வன்னி	05	83	62	-
வடக்கு	01	21	21	-
மொத்தம்	**719**	**315 18**	**683 15**	**19**

இந்த சகல பாடநெறிகளும் NVQ மட்டம் III,IV மற்றும் V என்ற வகையில் வெவ்வேறாக நடைபெறும்.

4.6. பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டுச் செயற்பாடுகள்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 56 மத்திய நிலையங்களில் NVQ மற்றும் NON NVQ பாடநெறிகள் நடாத்தப்படுவதுடன், தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளக்கூடிய சான்றிதழ்களை இளைஞர்களுக்கு வழங்குதல் இதன் மூலம் மேற்கொள்ளப்படும். தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பயிற்சி நிலையங்களில் நடாத்தப்படும் தேர்ச்சியற்ற (Non NVQ) பாடநெறிகளுக்கு செயன்முறை ரீதியானமற்றும் கோட்பாட்டு ரீதியான பரீட்சைகளை நடாத்தி இரண்டு மாதங்கள் கழியும் முன்னர் பரீட்சைப் பெறுபேறுகளை மத்திய நிலையங்களுக்கு வழங்கி சித்தியடைந்த பயிலுநர்களுக்கு மத்தியநிலைய மட்டத்தில் சான்றிதழ்களை மிகவும் துரிதமாகவும் மற்றும் முறையாகவும் வழங்கி வைத்தல் மேற்கொள்ளப்படும்.

2022 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான விபரம்

தொடர் இல.	நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	பங்குபற்றியவர்கள்
1.	Non NVQ பாடநெறிகளின் இறுதிப் பரீட்சையினை நடாத்தும் பயிலுநர்களின் எண்ணிக்கை	3062
2.	Non NVQ சான்றிதழ்களை வழங்குதல்	2721
3.	NVQ மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்	6931
4.	NVQ சான்றிதழ்களை வழங்குதல்	4795
5.	நிகழ்நிலைப் பரீட்சை வழிமுறையினை (online) அறிமுகம் செய்தல் மற்றும் கேக் பாடநெறியின் பயிலுநர்களுக்காக மேற்படி வழிமுறையின் ஊடாக பரீட்சையினை நடாத்தி குறித்த தினத்திலேயே சான்றிதழ்களை வழங்குதல்.	38
6.	நிஸ்கோ வீடியோப் பாடநெறியின் பரீட்சைகளை நடாத்துதல்	26
7.	நுண்கலைப் பாடநெறிகளுக்கான பரீட்சைகளை நடாத்துதல்	19
8.	நாடகங்கள் மற்றும் நடனக் கலைகள் பாடநெறியின் பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் சான்றிதழ் பத்திரங்களை வழங்குதல்.	35
9.	பாடப்பரப்புக்களைத் தயாரித்தல்	04

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பயிற்சி நிலையங்களில் நடாத்தப்படும் தேர்ச்சியினை அடிப்படையாகக் கொண்ட (NVQ) பாடநெறிகளுக்கான மதிப்பீடுகளை நடாத்தி தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்படும் தேசிய தொழில் சார் தகைமைகளுடனான NVQ சான்றிதழ்களை வழங்குதல் – 2022

4.7. தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு

இலங்கை நாட்டின் இளைஞர் சமுதாயத்தின் பொருளாதார ஸ்திரமற்ற தன்மையினைக் குறைப்பதற்காக வழிகாட்டி தொழில் முயற்சிக் கலாச்சாரம் ஒன்றினை நாட்டிற்குள் கட்டியெழுப்புவதற்கு முன்னோடியாக செயற்படுதல் இதன் பிரதான நோக்கம் ஆகும். இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு சேவைகளை வழங்குவதற்காக இளைஞர் கூட்டுறவு வலையமைப்பினை தரமான மற்றும் போதிய மற்றும் நிலைபேறானதாக அபிவிருத்தி செய்வதும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

2022 ஆம் ஆண்டின் செயலாற்றுகைத் திட்டத்திற்கு அமைய நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

தொடர் இலக்கம்	நிகழ்ச்சித்திட்டம்
1	இளம் தொழில் முயற்சியாளர்களைத் தெரிவு செய்தல்
2	இளம் தொழில் முயற்சியாளர்களின் பயிற்சி
3	25 துறைகளுக்காக தொழில் முயற்சியாளர்களை ஆயத்தம் செய்தல்
4	நிகழ்ச்சித்திட்டங்களின் பிரச்சாரம் மற்றும் மக்கள் மயப்படுத்தல்
5	மேற்பார்வை மற்றும் செயலாற்றுகை மீளாய்வு

4.8. விவசாய அபிவிருத்தி செயற்பாடுகள்

தேசிய தேவைப்பாடுகளுக்கு தோள் கொடுப்பதற்காக இளைஞர் யுவதிகளை நவீன தொழிநுட்பத்தின் ஊடாக விவசாயப் பயிர்ச்செய்கைகளுக்காக கூடிய ஆர்வத்தினை ஏற்படுத்தல். மேலும் நிலவும் பண்ணைகளில் நவீன தொழிநுட்ப முறைகளை அறிமுகம் செய்தல். 21 பண்ணை நிலையங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரித்தல் என்பன இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்டன.

2022 ஆம் ஆண்டின் செயலாற்றுகைத் திட்டத்திற்கு அமைய நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

- 21 பண்ணை மத்தியநிலையங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரித்தல்.
- பண்ணை உற்பத்தி விற்பனை நிலையங்களை நடாத்துதல் – பிரதான அலுவலகம், மஹரகம (2022.04.08-10) 15 விற்பனைக் கூடங்கள்.

மொத்த வருமானம்	மொத்தச் செலவு	இலாபம்
ரூ. 1,755993/-	ரூ. 774,249/-	ரூ. 744,981/-

- பண்ணை உற்பத்திகளின் பெறுமதியினை அதிகரித்தல் (value addition) கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- பண்ணைத் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் செயலாற்றுகை மீளாய்வு நிகழ்ச்சித்திட்டம் (2022.04.27,28 – படங்கல பண்ணை வளாகத்தில் – பங்குபற்றியவர்கள் 40 ஆகும்.)
- இளம் தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக 9000 இளைஞர்களைப் பதிவு செய்தல்.

- காளான் உற்பத்தி நிகழ்ச்சித்திட்டங்களை 05 பயிற்சி நிலையங்களைச் சார்ந்த வகையில் நடைமுறைப்படுத்தல்.
- நாடு பூராகவும் சகல மாவட்டங்களிலும் பண்ணைகள் மற்றும் மத்திய நிலையங்களைச் சார்ந்த வகையில் பயிர்ச்செய்கை வாரம் நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்.
- பிரதான அலுவலகத்தினைச் சார்ந்த வகையில் பண்ணை உற்பத்திகள் விற்பனைக் கூடம் ஒன்றினை ஆரம்பித்தல். (2022.08.15)
- எலஹெர சீஹெல இயற்கைப் பண்ணையில் அலுவலர் குலாத்திற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை நடாத்துதல். (2022.08.23/24)
- இளைஞர் விவசாயக் கம்பனிகளைத் தாபித்தல்.
  - பண்ணை நிலையங்களுக்காக விவசாய இயந்திர உபகரணங்களை வழங்குதல் மற்றும் கால்நடை வளர்ப்பிற்காக நிர்மாணிப்புக்களை மேற்கொள்ளல்.
  - 11 இளைஞர் விவசாயக் கம்பனிகளைப் பதிவு செய்தல்.

<u>குறுகிய கால விவசாயப் பாடநெறிகளை நடாத்துதல்</u>

இளைஞர் யுவதிகளை சுயதொழில்களில் ஈடுபடுத்துவதற்காக குறுகிய கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைப் பன்னல, எரமிணியாய, படங்கல மற்றும் உலபனே நிலையங்களைச் சார்ந்த வகையில் நடாத்துதல்.

4.9. ஊடகப் பிரிவு

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் சகல இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாகவும் ஊடகங்களை அறிவூட்டுதல் மற்றும் ஊடகங்களின் ஊடாக பாரிய பிரச்சாரம் ஒன்றினை வழங்குதல். தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உரிய வகையில் பத்திரிகை அறிவித்தல்களைத் தயாரித்தல் மற்றும் பிரசுரித்தல், வானொலி மற்றும் தொலைக்காட்சி அறிவித்தல்களை ஒளிபரப்பு செய்தல்,மின் ஒ ளியூட்டல் பதாகை (லைட் போட்) காட்சிப்படுத்தலுக்காக ஊடகக் கலையினை வடிவமைத்தல் மற்றும் தேவைப்பாடுகளுக்கு அமைய அந்தந்தப் பிரிவுகளினால் மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஊடகக் கலைகள் வடிவமைப்புக்களை செய்து கொடுத்தல் மற்றும் நினைவு ஏடுகளைத் தயாரித்தல், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் சகல இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் உரிய வகையில் தேவைப்பாடுகளுக்கு அமைய துண்டுப் பிரசுரங்கள், போஸ்டர்கள், கட்அவுட்ஹள் உட்பட சகல ஊடகக் கலை வடிவமைப்புக்களையும் மேற்கொள்ளல் ஆகியன ஊடகப் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

4.10. நிஸ்கோ வீடியோச் செயற்பாடுகள்

போட்டித் தன்மையான வர்த்தக உலகில் பல்வேறு சிரமங்களின் காரணமாக தமது திறமைகளின் ஊடாக பயன் பெறுவதற்கு இயலாத இலங்கை இளைஞர்களுக்கு பொருத்தமான சூழல் ஒன்றினைக் கட்டியெழுப்புவதற்காக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நிஸ்கோ வீடியோப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

இலத்திரனியல் மற்றும் சமூக ஊடகங்களின் ஊடாக Sri Lanka Youth பிரதிபிம்பத்தை சமூகமயப்படுத்துவதற்காக தேவையான உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் சினிமா தொடர்பில் ஆர்வம் உள்ள இளைஞர் யுவதிகளை அறிவு, உளப்பாங்குகள் மற்றும் திறன்களினால் போஷித்தல், அவர்களின் படைப்புக்களை தேசிய மட்டத்திற்குக் கொண்டு செல்வதற்குத் தேவையான சூழலினை அமைத்தல் என்பன பிரதான பணிகள் ஆகும்.

- **ரூபவாஹினி செய்தித் தழுவல், நிகழ்ச்சித்திட்டத் தயாரிப்பு மற்றும் பதிப்பு -** தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் சகல நிகழ்ச்சித் திட்டங்களையும் மக்கள் மயப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக ரூபவாஹினி அலைவரிசை மற்றும் சமூக வலையத் தளங்கள் என்பன (Facebook) பயன்படுத்தப்பட்டன. 233 இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் ரூபவாஹினி அலைவரிசை மற்றும் சமூக வலைத் தளங்களின் ஊடாக ஒளிபரப்பு செய்யப்பட்டன.

- **தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டத் தயாரிப்பு தொழிநுட்ப தேசிய டிப்ளோமாப் பாடநெறி** (NVQ 5) இந்த ஆண்டின் செப்தெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டின் செப்தெம்பர் ஆகும் போது பூர்த்தி செய்யப்பட உள்ளது.

4.11. திட்டமிடல் மற்றும் செயலாற்றுகை மீளாய்வுச் செயற்பாடுகள்

சுபீட்சத்திற்கான தொலைநோக்கு தேசிய கொள்கைகளுக்கு ஒத்தியங்கும் வகையில், நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதன் ஊடாக நாட்டின் இளைஞர் யுவதிகளின் தேவைப்பாட்டிற்கு அமைய தாபன நடவடிக்கைகளை முறையாகத் திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல் என்பவற்றிற்காக வழி காட்டுவதன் ஊடாக தாபனத்தின் செயலாற்றுகையினை முறையான வகையில் விருத்தி செய்தல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

இணைந்த திட்டத்தினைத் தயாரித்தல், வருடாந்த அபிவிருத்தித் திட்டம், வருடாந்த செயலாற்றுகைத் திட்டம் மற்றும் மாவட்டத் திட்டம் என்பவற்றினைத் தயாரித்தல் என்பன பிரதான வகையில் மேற்கொள்ளப்படுகின்றன. வருடாந்த செயலாற்றுகைத் திட்டத்திற்கு அமைய முன்னேற்றத்தினை (வாராந்த, மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த) கண்காணித்தல் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் கண்காணிப்பின் பின்னர் தாபனத்தின் செயலாற்றுகை மற்றும் வருடாந்த அறிக்கைகளைத் தயாரித்தல் என்பனவும் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறே பாடநெறியினைக் கற்கும் பயிலுநர்கள் மற்றும் பதவியணியின் காலத்திற்கேற்ற தகவல்கள் மற்றும் அறிவு விருத்தி, வாசிக்கும் இரசனைக்காக நூலகத்தைப் பேணி வருதல் மற்றும் அதன் அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பனவும் மேற்கொள்ளப்படுகின்றன.

4.12. தகவல் தொழிநுட்பச் செயற்பாடுகள்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சகல தகவல் தொழிநுட்பத் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்தல் இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. மேற்படி தேவைப்பாடுகளுள்,

01. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் செயற்பாடுகளை நவீன தொழிநுட்பத்தினைப் பயன்படுத்தி நிறைவேற்றுவதற்காக தேவையான தொழிநுட்ப வசதிகளை விருத்தி செய்தல்.
02. வினைத்திறன் மிக்க தொடர்பாடல் செயன்முறை ஒன்றினை அமைப்பதன் ஊடாக இலங்கை இளைஞர்களுக்கு வினைத்திறன் மிக்க தகவல் தொடர்பாடலினை வழங்குதல்.
03. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினை அபிவிருத்தி செய்தல் மற்றும் இற்றைப்படுத்தல் என்பவற்றின் ஊடாக தகவல்களை விரைவாக வழங்குதல்.
04. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் நிலவும் கணனி வலையமைப்புக் கட்டமைப்பினைப் பராமரித்தல் மற்றும் பேணி வருதல் மற்றும் இற்றைப்படுத்தல்.
05. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் கழகங்கள் / பயிற்சி நிலையங்கள் என்பவற்றில் இளைஞர் யுவதிகளின் தகவல் தொழிநுட்பப் பாவனை மற்றும் பாதுகாப்பு என்பன தொடர்பாக அறிவூட்டும் செயலமர்வுகளை ஏற்பாடு செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.

2022 ஆம் ஆண்டின் செயலாற்றுகைத் திட்டத்திற்கு அமைய நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

1. முகாமைத்துவத் தகவல் முறைமை ஒன்றினை (MIS) வடிவமைத்து பேணி வருதல்.
    - சகல பயிற்சி நிலையங்களிலும் பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றுகையினைப் பெற்றுக் கொள்வதற்காக முகாமைத்துவ மென்பொருள் முறைமை ஒன்றினை உருவாக்குதல் மற்றும் அதில் தரவுகளை உள்ளடக்கி நடைமுறை மட்டத்தில் பேணி வருதல்.
2. இணையத் தளத்தினை நிர்மாணித்தல்.
    - தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட இணையத் தளத்தினை நவீனமயப்படுத்தல் மற்றும் பேணி வருதல்.
3. விவசாய வியாபாரிகளை அடையாளம் காண்பதற்காக தரவுக் கட்டமைப்பு ஒன்றினை நிர்மாணித்தல்.

    - விவசாயத் தொழில் முயற்சியாளர்களைத் தெரிவு செய்வதற்காக தரவு முறைமை ஒன்றினை நிர்மாணித்தல்.

4.13. தொழில்சார் வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனை வழங்கல் செயற்பாடுகள்.

வேலை உலகம், வேலை உலகின் போக்குகள் மற்றும் வாய்ப்புக்கள் தொடர்பில் எதிர்கால இலக்குகளை வெற்றி கொள்வதற்காக தம்மில் காணப்படும் உள்ளார்ந்த ஆற்றல்களை விருத்தி செய்து கொள்வதற்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்தல்.

பாடசாலைக் கல்வியினைப் பூர்த்தி செய்யும் இளைஞர் யுவதிகள் முகங்கொடுக்கும் உளவியல், உடலியல், தொழில் சார், பாலியல் மற்றும் கல்வி சார் பிரச்சினைகளின் முன்னிலையில் தனியாகத் தீர்வு காண முடியாத சந்தர்ப்பங்களில் அவர்களுக்காக உளவியல் விஞ்ஞானப் பார்வையில் மேற்படி பிரச்சினைகளை எதிர்நோக்குவதற்கும் அதனூடாக அவர்களின் பிரச்சினைகளுக்கு உளவியல் விஞ்ஞான ரீதியாக சிகிச்சைகளை மேற்கொள்வதற்கும் இந்த நிலையத்தின் ஊடாக வழிகாட்டல் மேற்கொள்ளப்படும். நாட்டின் 26 மாவட்டங்களிலும் தொழில்சார் வழிகாட்டல் நிலையங்கள் செயற்படுகின்றன. அவ்வாறே கண்டி, குருணாகல், பிரதான அலுவலகம் மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் ஆலோசனை வழங்கல் மத்திய நிலையங்கள் செயற்படுகின்றன. இந்தப் பிரிவு செயற்படும் நோக்கங்கள் ஆவன,

1. தனியாள் திறனின் அடிப்படையில் எதிர்கால இலக்குகளை கட்டியெழுப்புவதற்குத் தேவையான உதவியினை வழங்குதல்.
2. நேர்முகப் பரீட்சைகளுக்காக இளைஞரை உரிய முறையில் முன்னளிப்பதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குதல்.
3. வேலை உலகின் புதிய போக்குகள் தொடர்பாக அறிவூட்டுதல்.
4. இளைஞர்களின் படைப்பாற்றல்களை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
5. உளவியல் விஞ்ஞான ரீதியாக ஆலோசனை வழங்கல், இளைஞர்களின் மென்மையான திறன்களை விருத்தி செய்து அழுத்தங்களை முகாமைத்துவம் செய்வதன் மூலம் சமூக மயமான இளைஞர் ஒருவரைத் தோற்றுவித்தல்.
6. தொழில்சார் வழிகாட்டல், இளம் கட்டளமைப்பருவ இளைஞர்கள் முகங்கொடுக்கும் உடல் மற்றும் உளப் பிரச்சினைகளுக்கு உரிய ஆலோசனைகளை வழங்குதல்.

இலக்காகக் கொண்ட மக்கள்

தொழில்சார் வழிகாட்டல்

1) பாடசாலை மாணவர்கள்
2) பாடசாலையினை விட்டு விலகிய இளைஞர் யுவதிகள்.
3) தொழில்சார் பயிற்சிகள் மற்றும் வேறு பாடநெறிகளைத் தொடரும் மாணவர்கள்.
4) பெற்றோர்கள்

உளவியல் விஞ்ஞான ரீதியாக ஆலோசனை வழங்கல்

1. உடல், உள, மனஎழுச்சி ரீதியாக,சமூக,ஆளுமை ரீதியான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் இளைஞர் யுவதிகள்

2. **தொழில்சார் வழிகாட்டல்கள் மற்றும் உளவள ஆலோசனைப் பிரிவினால் 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான விபரங்கள்.**

திகதி - 2022.08.12

இடம் - பிரதான அலுவலகத்தின கேட்போர் கூடம்

நிகழ்ச்சித்திட்டம் – சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு மஹரகம பயிற்சி நிலையத்தில் பயிலுநர்களுக்காக நடாத்தப்பட்ட தொழில்சார் வழிகாட்டல் செயலமர்வு.

திகதி - 2022.08.15

இடம் - பிரதான அலுவலகத்தின கேட்போர் கூடம்

நிகழ்ச்சித்திட்டம் – மஹரகம பயிற்சி நிலையத்தில் பயிலுநர்களுக்காக நடாத்தபட்ட தொழில் முயற்சி அபிவிருத்திச் செயலமர்வு

திகதி - 2022.11.03

இடம் – வித்யாகர தேசிய பாடசாலை

நிகழ்ச்சித்திட்டம் – 150 பாடசாலை மாணவர்களுக்கான ஆலோசனை வழங்கல் நிகழ்ச்சித்திட்டம்

4.14. விஷேட கருத்திட்டச் செயற்பாடுகள்

01. “ஐந்தாவது இலங்கை இளைஞர் பாராளுமன்ற” நிகழ்ச்சித்திட்டம்

இலங்கையில் காலத்திற்கு ஏற்ற பொருளாதார, சமூக, அரசியல், கலாச்சார மற்றும் சுற்றாடல் நிலைமைகள் தொடர்பாக மிகவும் கூருணர்வுடைய மற்றும் மேற்படி துறையில் விடய அறிவினால் போஷிக்கப்பட்ட எதிர்கால அரசியல் வகிபாகத்தைப் பிரதிநிதித்துவம் செய்வதற்காக பொருத்தமான மனித நேயமிக்க இலங்கைய இளம் தலைவர்களைத் தோற்றுவித்தல்.

நாட்டின் திட்டங்கள் மற்றும் கொள்கை உருவாக்கத்தின் போது அவர்களது கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயங்களை பிரதிநிதித்துவம் செய்தவற்கு உரிய சந்தர்ப்பத்தினை வழங்குதல், பல்வேறு சமூக சேவைகளின் பரிச்சயங்களின் ஊடாக உண்மையான செயற்பாட்டாளர் ஒருவராக, மற்றும் தொண்டர் தலைவர் ஒருவராக கட்டியெழுப்புவதற்குத் தேவையான பின்னணியினைத் தோற்றுவித்தல் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

பாராளுமன்றத்தின் கூட்டிணைவு

பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் நடாத்தப்பட்ட தேர்தல்கள்	-	331
பல்கலைக்கழக மட்டத்தில் நடாத்தப்பட்ட தேர்தல்கள்	-	29
		360

2022 ஆம் ஆண்டில் இலங்கை இளைஞர் பாராளுமன்றத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

- **இலங்கை இளைஞர் பாராளுமன்ற கூட்டத்தொடர்களை நடாத்துதல்**

  இரண்டாவது கூட்டத்தொடர்

நடாத்தப்பட்ட தினங்கள் - 2022.01.18 மற்றும் 19 ஆகிய இருநாட்கள்

நடைபெற்ற இடம் - மஹரகம, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வளாகத்தில்

பங்குபற்றியவர்கள் - 149

பிரதான அதிதிகள் - மாலைத்தீவுக் குடியரசின் கௌரவ சபாநாயகர் மொஹமட் நஷீட் அவர்கள் மற்றும் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் கௌரவ நாமல் ராஜபக்ஷ அவர்கள்

விவாதத் தலைப்பு - கொவிட் தொற்றுநோய் பின் நிலைமையின் முன்னிலையில் தேசிய அபிவிருத்திப் பணிக்காக இளைஞரின் கடமைப்பொறுப்பு.

- <u>**இலங்கை இளைஞர் பாராளமன்ற உறுப்பினர்கள், இளைஞர் கழக உறுப்பினர்கள், ஏனைய இளைஞர் அமைப்புக்களின் இளைஞர் யுவதிகளுக்கான சமூக மற்றும் கொள்ளளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்துதல்.(உலக சுகாதார அமைப்பினால் ஒதுக்கீடு வழங்கப்பட்டது.)**</u>

இலங்கை இளைஞர் பாராளுமன்றத்தினை பிரதிநிதித்துவம் செய்யும் உறுப்பினர்கள்,இளைஞர் கழக உறுப்பினர்கள் ஏனைய இளைஞர் அமைப்புக்களின் இளைஞர் யுவதிகள் ஆகியோருக்கு சமூக அபிவிருத்தி தொடர்பான அறிவு மற்றும் விளக்கம் என்பவற்றினை வழங்குவதற்கு மற்றும் தேசிய அபிவிருத்திப் பணிக்காக தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் உலக சுகாதார அமைப்பு (WHO) என்பன ஒன்றிணைந்து இந்த நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்தின.

நோக்கங்கள்.

சமூக அபிவிருத்தி தொடர்பான கோட்பாட்டு ரீதியான அறிவு, உளப்பாங்குகள் மற்றும் திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கு செயன்முறை ரீதியான சந்தர்ப்பத்தினை வழங்குதல்.

1. தேசிய அபிவிருத்திக்குத் தேவையான பொதுமக்களின் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ளல்.
2. பொதுமக்கள் மற்றும் இளைஞருக்கு இடையில் ஆளிடைத்தொடர்புகளைக் கட்டியெழுப்புதல் மற்றும் வலுவூட்டல்.
3. இளைஞனின் உள சமூக அபிவிருத்தியை மேற்கொள்ளல்.
4. சமூக மாற்றுவழியாளராக இளைஞரை மாற்றுதல். .

- நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை - 18
- நடாத்தப்பட்ட இடம் – துல்ஹிரிய, மார்ஸ் பெப்ரிக் பார்க் தனியார் நிறுவன வாளகத்தில்.
- பங்குபற்றியவர்களின் மொத்த எண்ணிக்கை - 1159

- <u>''Young பெதுர '' நிகழ்ச்சித்திட்டம்</u>

நாடு பூராகவும் பரவிக் காணப்படும் இளைஞர் யுவதிகளின் அறிவிப்பாளர், பாடல் மற்றும் இசைத்தல் திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்காக நடைமுறைப்படுத்தப்படும் டிஜிட்டல் மேடை ஆகும். தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் பட்டை தீட்டப்பட்ட அனுபவம் மிக்க தலைவர்களின் அனுபவங்களை இளைஞர் யுவதிகளுக்கு இடையில் பகிர்ந்து கொள்ளல் இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்த நிகழ்ச்சித்திட்டம் 2022.01.27 ஆம் திகதி ஒளிப்பதிவு செய்து ஹரித TV 2022.02.04 ஆம் திகதி அலைவரிசையில் ஒளிபரப்பு செய்யப்பட்டு உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளடக்கம்

01. தலைப்பு - உலகமயமாக்கத்தின் முன்னிலையில் சமூகத்தில் ஏற்படும் பொருளாதார, அரசியல், கலாச்சார, சமூக, சூழலியல் மாற்றங்களை நோக்கிச் செல்லும் போது இளைஞர் சமூகம் ஒன்றினைக் கட்டி எழுப்புதல்.

02. பங்குபற்றியவர்கள் -இலங்கை ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் திரு.கே.எம்.அலெக்சாந்தர் அவர்கள் மற்றும் பேராசிரியர் திரு.பத்மசிறி கன்னங்கர.

03. நெறிப்படுத்தல் - ஊடகவியலாளர் திரு. குமார லியனகே மற்றும் திரு. லசந்த விக்ரமசிங்ஹ

- **<u>பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் “பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (வெளிவாரியான நிதி திரட்டல் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது.)</u>**

ஆசிய மன்றம் (THE ASIA FOUNDATION) , தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் என்பன ஒன்றிணைந்து இளைஞர் பாராளுமன்ற பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவித்தல்..

நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை - 03
பயிற்சி பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை - 60

4.15. செயலாற்றுகை மதிப்பீடுகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிச் செயற்பாடுகள்

உள்நாட்டு மற்றும் சர்வதேச வாய்ப்புக்களைப் பயன்படுத்தி வாழ்க்கையின் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்காக இலங்கை நாட்டு இளைஞர்களை வலுவூட்டுவதற்காக இளைஞர் அபிவிருத்தியின் முன்னோடி என்ற வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு தனது சேவையினை சிறந்த முறையிலும் மற்றும் நம்பிக்கைக்குரிய வகையிலும் வழங்குவதற்காக அலுவலர் குழாத்திலுள்ள உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிக்கும் போது எதிர்பார்க்கப்படும் மட்டத்திற்கும் மற்றும் நிலவும் மட்டத்திற்கும் இடையில் நிலவும் இடைவெளியினை நிரப்புவதற்காக அலுவலர்களின் அறிவு, திறன்கள் மற்றும் உளப்பாங்கினை விருத்தி (மனித வள அபிவிருத்தி) செய்தல், செயலாற்றுகை மதிப்பீடுகள் மற்றும் அலுவலர்களின் பயிற்சிகள் பிரிவின் பிரதான பணியாகும்.

அலுவலர் குழாத்தின் பயிற்சித் துறையின் அடிப்படையாக சேவையில் ஈடுபட்டு உள்ள உத்தியோகத்தர்களுக்கு அவர்களது தொழிற்துறைக்கு உரிய பயிற்சிகளை வழங்குதல் மேற்கொள்ளப்படும். இதனூடாக ஊழியர்களின் வினைத்திறன் மற்றும் விளைதிறன் என்பவற்றினை விருத்தி செய்வதன் ஊடாக நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்தகொள்ளல் அடிப்படை அபிலாஷையாகும்

2022 ஆம் ஆண்டில் 03 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் மற்றும் செயலமர்வுகளும் நடாத்தப்பட்டதுடன், அதற்காக 104 உத்தியோகத்தர்கள் பங்குபற்றி உள்ளனர்.

ருவாகப் பிரிவின் செயற்பாடுகள்

.தாபன பிரிவு நடவடிக்கைகள்

5.1 நிறுவன விவகாரம்

1979 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க தேசிய இளைஞர் சேவைகள் சட்டத்தின் கீழ் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக தேவையாள ஆளணியினரை ஆட்சேர்ப்புச் செய்வதன் கீழ் தாபனப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ள கடமைப் பொறுப்பிற்கு அமைய 2022 ஆம் ஆண்டிற்குள் பதவியுயர்வுகள் வழங்கல், இடமாற்றங்கள், ஒழுக்காற்றுக் கட்டளைகளுக்கு அமைய சேவை நீக்கல்கள்,பதவியினை விட்டு விலகிச் செல்லல், சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள், பதவியிலிருந்து ஓய்வு பெறச் செய்தல், மற்றும் பதவியனை இராஜினாமாச் செய்தல் என்பன முன்னைய வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வகையிலேயே மேற்கொள்ளப்பட்டு உள்ளன. 2022.12.31 ஆம் திகதியன்று அனுமதிக்கப்பட்ட ஆளணி மற்றும் வெற்றிடம் நிலவும் ஆளனி என்பன தொடர்பான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டு உள்ளன.

- **ஆளணி முகாமைத்துவம்**

தொடரிலக்கம்	அனுமதிக்கப்பட்ட ஆளணி	நிலவும் ஆளணி	வெற்றிடங்கள்	மிகை	மேலதிக ஊழியர் அடிப்படையில்	வகிப்பவருக்கு தனிப்பட்ட முறையில்
சிரேஷ்ட	68	63	11	0	5	1
மூன்றாம் நிலை	124	75	55	0	6	0
இரண்டாம் நிலை	1054	910	251	73		34
ஆரம்ப நிலை	203	263	58	0	0	118
மொத்தம்	1449	1311	375	73		153

புதிய ஆட்சேர்ப்புக்கள் (நிரந்தர/அமய/ஒப்பந்த)

2022 ஆம் ஆண்டிற்காக கீழே குறிப்பிடப்பட்டு உள்ள புதிய ஆட்சேர்ப்புக்களின் கீழ் இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் இல்லை.

- **பதவியுயர்வுகளை வழங்குதல்**

2022 ஆம் ஆண்டில் பதவியுயர்வு வழங்கப்பட்டு உள்ள உத்தியோகத்தர்களின் பெயர்ப் பட்டியல் கீழே குறிப்பிடப்பட்டு உள்ளது.

தொடரிலக்கம்	பெயர்	பதவி	வழங்கப்பட்ட திகதி
1	திருமதி. குமாரி ஹேரத்	பிரதிப் பணிப்பாளர்	2022.12.06
2	திரு.என்.எச்.முனவ்வர்	பிரதிப் பணிப்பாளர்	2022.12.06
3	திருமதி.ஏ.டீ.ஜே.குமுதினி ராஜபக்ஷ	பிரதிப் பணிப்பாளர்	2022.12.06
4	திரு.எச்.டீ. கீர்திரத்ன	பிரதிப் பணிப்பாளர்	2022.12.06
5	திரு.எம்.பீ.குணசேன	பிரதிப் பணிப்பாளர்	2022.12.06
6	திரு.எல்.எச்.ஜகத் பிரேமஷாந்த	பிரதிப் பணிப்பாளர்	2022.12.06
7	திரு. எம்.கே.டீ.விராஜ் கபில மடபாத்த	பிரதிப் பணிப்பாளர்	2022.12.06
8	திரு. பிரபாத் லியனகே	பிரதிப் பணிப்பாளர்	2022.12.06
9	திரு.ரெஜினோல் ரணசிங்ஹ	பிரதிப் பணிப்பாளர்	2022.12.06

10	திரு.ஏ.ஏ.என்.டீ. சம்பாயோ	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
11	திரு. பி.ஜீ.சாந்த விமல் அபேவிக்ரம	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
12	திரு.சந்தன உயன்கொட குமார	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
13	திருமதி.டீ.ஜி.மல்லிகா காந்தி ஜயதிஸ்ஸ	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
14	திரு.டீ.ஜி.அஜந்த எஸ்.விஜேதிலக்க	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
15	திரு.எம்.பி.ரொஷான் ஜயசூரிய	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
16	திரு.கே.எம்.பி.சந்திரசேன	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
17	திருமதி.எஸ்.வினோதினி ஷ்ரீமென்	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
18	திரு.சரத் உக்வத்த	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
19	திருமதி.டீ.ஜி.ஏ.குமுதுனி	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
20	திரு.சரத் கொடிகார	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
21	திருமதி.டபிள்யூ.ஏ.கங்கா சாகரிகா தமயந்தி	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
22	திரு. பிரியந்த ஜயரத்ன	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
23	திரு.ஏ.நவேந்திரன்	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
24	திரு.எச்.எம்.அனில்சிறி ஹேரத்	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
25	திரு.வை.எம்.என்.நிஷாந்த குமார	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
26	திரு.அஷோக சந்தன வெலிஅங்கே	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
27	திரு.எம்.ஷிரோமி குமாரி சந்திரதாஸ	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
28	திரு.டீ.எம்.ரீ.சீ.துஷார திசாநாயக்க	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
29	திரு. எம்.ஏ.ஜே.ஆர்.மதுரசிங்ஹ	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
30	திரு.எச்.எம்.யூ.வீ.எஸ்.ஹேரத் பண்டார	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
31	திரு.ரீ.எம்.ஜயவீர	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
32	திரு.ரஞ்ஜித் விதான பதிரண	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
33	திரு.டபிள்யூ.ஏ.லால் ஹேமந்த	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
34	திருமதி.ஐ.ஆர்.கலாராணி	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
35	திரு.ரீ.எஸ்.குமாரசிங்ஹ	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
36	திரு.டீ.எம்.சுசிந்தன திஸாநாயக்க	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
37	செல்வி. பி.ஜீ.ஆர்.சந்தமாலி	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
38	திருமதி.டபிள்யூ.ஏ.மாலா தமயந்தி விதான	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
39	திரு.கே.டீ.சீ.காமிணி	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
40	திரு.என்.குகேந்திர	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
41	செல்வி. எம்.நிர்மலி வத்சலா த சில்வா ஜயசேகர	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
42	திரு.ஜனக பிரபாத் ஹெட்டிஆரச்சி	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
43	திருமதி.டபிள்யூ.ஐ.என்.தமயந்தி	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
44	திரு.எஸ்.ஆர்.ரூபசேன	உதவிப் பணிப்பாளர்	2022.11.01
45	திருமதி.எம்.எம்.சுஜானி பிரியந்திகா	உதவிப் பணிப்பாளர்	2022.11.01

- **அமைய ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குதல்**

இந்த வருடத்தில் அமைய ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவில்லை.

- **ஓய்வு பெறச் செய்தல்கள்**

2022 ஆம் ஆண்டில் ஓய்வுபெறச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் பெயர்ப் பட்டியல் கீழே குறிப்பிடப்பட்டு உள்ளது.

. தொடரி லக்கம்	ஈ.பி.எப். இலக்கம்	உத்தியோகத்தரின் பெயர்	பதவி	ஓய்வு பெறச் செய்யப்பட்ட திகதி
1	2013	திரு.டீ.எம்.என்.ஜி.ம்.பீ. திசாநாயக்க	விஷேட போதனாசிரியர்	2022.12.31
2	4003	திரு.எச்.எம்.விஜேகோன்	தொழிலாளி	2022.12.31
3	3442	திருமதி.ஆர்.பி.கே.தீபானி மங்கலிகா பெரேரா	தொழிலாளி	202212.31
4	1575	திரு.கே.எம்.சரத் ஆனந்த	துப்பரவுத் தோட்டத் தொழிலாளி	2022-12-02
5	1098	திரு.பிரபாத் லியனகே	பிரதிப் பணிப்பாளர்	2022.12.31
6	1717	திருமதி.டபிள்யூ.ஏ.அல்விஸ்	நூல்நிலையப் பொறுப்பாளர்	2022-12-31
7	2585	திரு.பி.ஹேரத்	இளைஞர் சேவை உத்தியோகத்தர்	2022-12-31
8	1475	திரு.ஜி.ஜி.உபாலி எதிரிசிங்ஹ	சாரதி	2022.12.31
9	1724	திரு.ஆர்.எம்.சந்திரசேன	தொழிலாளி	2022-12-31
10	2466	திருமதி.எச்.எம்.கே.ஹேரத்	முகாமைத்துவ உதவியாளர் III	2022.12.31
11	1034	திரு.கே.கே.சீ. உபுல் ஜயவீர	வீடியோப் பதிப்பாளர்	2022-12-31
12	2366	திரு.எஸ்.டீ.எல்.எஸ்.ஜே. பெனட்	முகாமைத்துவ உதவியாளர் 1	2022.12.31
13	3090	திருமதி.ஏ.ஏ.டீ.சீ.தொட்டவத்தகே	முகாமைத்துவ உதவியாளர் 11	2022.12.31
14	1334	திரு.எஸ்.எம்.எஸ்.செனெவிரத்ன	உதவிப் பணிப்பாளர்	2022-12-31
15	2671	திரு.எல்.எச்.ஏ.சந்திரசிறி	பண்ணை உதவியாளர்	2022.12.31
16	3045	திரு.டபிள்யூ.ஜே.லியனபதிரன	இளைஞர் சேவை அதிகாரி	2022.12.31
17	1472	திரு.ஜி.பிரேமசிறி	இளைஞர் சேவை அதிகாரி	2022.12.31
18	1305	திரு.ஜி.ஏ.எஸ்.பிரேமலால்	மாவட்ட இளைஞர் சேவை அதி	2022.12.31
19	2326	திருமதி.ஜே.ஏ.பிரியந்தி	முகாமைத்துவ உதவியாளர் 11	2022.12.31
20	2976	திரு.ஆர்.எம்.பி.கே. ரத்னாயக்க	சாரதி	2022-12-31
21	2086	திரு.எஸ்.ஜே. வன்னி ஆரச்சி	சாரதி	2022-12-31
22	1101	திரு. சுனில் கருணாரத்ன	பிரதிப் பணிப்பாளர்	2022.10.24
23	1224	திரு.ஜே.ஏ.ஏ.ஆர்.ரணசிங்ஹ	பிரதிப் பணிப்பாளர் (ப.க.)	2022-12-31
24	2714	திரு.ஆர்.எம்.சீ.ரத்னாயக்க	முகாமைத்துவ உதவியாளர் 11	2022.12.31
25	2015	திரு.யூ.ஜீ.பியதாஸ	காவலாளி	2022-12-31
26	2272	திரு.டபிள்யூ.பி.டபிள்யூ.விக்ரமசிங்ஹ	தொழிநுட்ப்பவியலாளர்	2022-12-31
27	1552	திரு.யூ.ஏ.ஏ.விஜித	போதனாசிரியர்	2022.12.31
28	1708	திரு.கே.ஜி.ஆசிரி உபசேன	சிரேஷ்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர்	2022.12.31
29	2673	திருமதி.பீ.வி.தேவிகா சித்ரலதா	முகாமைத்துவ உதவியாளர் 1	2022.12.31
30	2692	திரு.கே. கருணாரத்ன	காவலாளி	2022.12.31

- **சேவையினை இராஜினாமாச் செய்தல்**

பல்வேறு காரணங்களின் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டிலும் கீழே குறிப்பிடப்பட்டு உள்ள உத்தியோகத்தர்கள் மன்றத்தின் சேவையினை இராஜினாமா செய்துள்ளனர். உத்தியோகத்தர்களின் பெயர்ப் பட்டியல் கீழே குறிப்பிடப்பட்டு உள்ளது.

தொடரி லக்கம்	ஈ.பி.எப். இலக்கம்	உத்தியோகத்தரின் பெயர்	பதவி	இராஜினாமாச் செய்த திகதி
1	2176	திரு. பியசிறி சமரசிரி	இளைஞர் சே.அதி	2022.11.01
2	1836	திரு.ஜே.கிருபைராசா	இளைஞர் சே.அதி	2022.11.01
3	4266	திருமதி. ஜனாதிமஹேஷிகா	முகாமைத்துவ உதவி 111	2022.11.07
4	859	திருமதி.பமோதா சிரிவீர	நிருவாக உத்தியோகத்தர்	2022.12.16
5	1149	திரு.ஏ.பி. சந்தன	முகாமைத்துவ உதவியh	2022-12-12
6	4105	திருமதி.துஷாங்கி குடலிகம	உதவி இளைஞர் சே.அதி	2022.04.24
7	4107	திருமதி. தினேகா அமாலி	உதவி இளைஞர் சே.அதி	2022.06.13
8	4089	திருமதி. மேரியன் சுகந்திகா	உதவி இளைஞர் சே.அதி	2022.09.30
9	2185	திரு. அருண சாந்த	இளைஞர் சேவை அதிகாரி	2022.12.31
10	1460	திரு.டீ.எம். காமிணி குணதுங்க	இளைஞர் சேவை உத்தியோகத்தர் 11	2022.12.31
11	3928	திரு. மலிந்த புத்திக லியனகமகே	இளைஞர் சேவை சே.அதி	2022.11.28
12	3138	திரு.என்.டீ.நிஹால் சேனாநாயக்க	தொழிலாளி	2022.12.30

- **பதவியினை விட்டு விலகிச் செல்லல்**

  பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கீழே பெயர் குறிப்பிடப்பட்டு உள்ளவர்கள் 2022 ஆம் ஆண்டில் பதவியினை விட்டு விலகிச் சென்றதாகக் கருதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

தொடரி லக்கம்	ஈ.பி.எப். இலக்கம்	உத்தியோகத்தரின் பெயர்	பதவி	இராஜினாமாச் செய்த திகதி
1	4296	திரு.ஆர்.எம். புத்திய நுவன் பராக்கிரம	உதவி இளைஞர் சேவை	2022.03.03
2	3969	திரு.எச்.பீ.எஸ்.எம்.எஸ். பண்டார	உதவிக் கலைஞர்	2022.05.10
3	2912	திரு. சுசில் பாலித	தொழிலாளி	2022.01.13

- **மீண்டும் சேவையில் அமர்த்துதல் / சேவையினை முடிவுருத்துதல் / சேவையினை இடைநிறுத்துதல்.**

  2022 ஆம் ஆண்டில் மீண்டும் சேவையில் அமர்த்துதல் / சேவையினை முடிவுருத்துதல் சேவையினை இடைநிறுத்துதல் மேற்கொள்ளப்படவில்லை.

- **கடன் முற்பணம்**

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சகல ஊழியர்களுக்கும் இடர் கடனினைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு உள்ளன. அதற்கு அமைய 2022 ஆம் ஆண்டின் சனவரி முதல் டிசம்பர் வரை இடர் கடனாக ரூ..45,750,000.00 தொகை ஊழியர்களுக்கும் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டு உள்ளன.

- **ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் சேவை நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்.**

2022 ஆம் ஆண்டில் ஓய்வு பெறச் செய்யப்பட்ட மற்றும் ஓய்வூதியம் உடைய நிரந்தர தொழில்களுக்குச் செல்வதற்காக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் இருந்து இராஜினாமாச் செய்துள்ள அலுவலர் குழாத்திற்காக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் சேவை நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

5.2 பெறுகை நடவடிக்கைகள்

பெறுகைகள் பிரிவின் பிரதான பணியானது, தலைமை அலுவலகம், மாகாண அலுவலகம், மாவட்ட அலுவலகங்கள், பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றில் ஏற்படும் தேவைப்பாடுகளுக்காக (சேவைகள் மற்றும் பொருட்கள் என்ற வகையில்) முறையான அனுமதி ஒன்றுடன் மேற்கொள்ளப்படும் கோரிக்கையின் பின்னர் பெறுகைகள் நடைமுறையினைப் பின்பற்றி மேற்படி பணிகளை நிறைவேற்றுவதாகும்.

2022 ஆம் ஆண்டில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைமை அலுவலகத்தின் ஊடாகவும் ,ஏனைய அலுவலகங்களின் ஊடாகவும் மற்றும் பயிற்சி நிலையங்களின் ஊடாகவும் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கி நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ளன.

5.3 போக்குவரத்து நடவடிக்கைகள்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இலக்குகள் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக பல்வேறு பிரிவுகளின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களில் பிரதான உதவிச் சேவை ஒன்றாக போக்குவரத்துச் சேவை ஒன்றினை வழங்குதல் இதன் மூலம் கொள்ளப்படுகின்றது.

5.4 உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு உரிய வகையில் கணக்காய்வாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ள கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் மற்றும் தலைவரின் ஆலோசனைகளுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படும் புலனாய்வுகள் மற்றும் ஏனைய விஷேட கடமைகளை நிறைவேற்றுதல் என்பன மேற்படி பிரிவின் பிரதான கடமைப் பொறுப்பாகும்.

5.5 செயலாளர் அலுவலகத்துடன் தொடர்பான நடவடிக்கைகள்

செயலாளர் பிரிவின் ஊடாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின், பணிப்பாளர் சபைக் கூட்டத்தினை ஏற்பாடு செய்தல்,பேணி வருதல், அங்கு மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்காக உரிய பிரிவுகள் மற்றும் பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள் ஆகியோரிடம் பகிர்ந்தளித்தல் என்பன மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏனைய நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உரிய வகையில் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு ஒப்படைக்கப்படும் கடமை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

5.6 சட்டப் புலனாய்வுச் செயற்பாடுகள்.

சட்டப் புலனாய்வுப் பிரிவானது, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் தொடரப்பட்டு உள்ள வழக்குகள் தொடர்பாகவும் மற்றும் மேற்படி மன்றத்திற்கு எதிராக தொடரப்பட்டு உள்ள வழக்குகள் தொடர்பாகவும் மேற்படி மன்றத்திற்குப் பதிலாக மற்றும் தலைவர் பணிப்பாளர் நாயகத்திற்குப் பதிலாக தோன்றுதல் மற்றும் விடயங்களை முன்வைத்தல், தேவைப்பாட்டிற்கு அமைய சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஒருங்கிணைப்பு செய்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

5.7 நிர்மாணிப்புக்கள் பிரிவின் செயற்பாடுகள்.

நிர்மாணிப்புக்கள் / பராமரிப்புக்கள் பிரிவின் மூலம், நாடளாவிய ரீதியில் காணப்படும் சகல மாகாண அலுவலகங்கள் மாவட்ட அலுவலகங்கள் ,இளைஞர் மத்திய நிலையங்கள் என்பவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் தொழில்சார் பயிற்சிகளுக்கு உரிய கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் நவீனமயப்படுத்தல் என்பன மேற்கொள்ளப்படும். அதற்கு மேலதிகமாக மஹரகம பிரதான அலுவலகத்தின் பல்தொரு கட்டமைப்பின் பராமரிப்பு வேலைகளை மேற்கொள்ளல், பிரதான நடன மண்டபத்தின் நாளாந்த பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல். தோட்ட அலங்கார நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் இளைஞர் மத்தியநிலையங்களின் நாளாந்த பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் பழுதுபார்த்தல் ஆகிய நடவடிக்கைகளும் நிறைவேற்றப்படுகின்றன.

2022 ஆம் ஆண்டிற்கு உரிய நிகழ்ச்சித்திட்டங்களின் செயலாற்றுகை

2022 ஆம் ஆண்டிற்காக காலாண்டு அடிப்படையில் ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டதுடன் கடந்த வருடங்கள் தொடக்கம் நிறைவேற்றப்பட்டு வந்த கீழே குறிப்பிடப்பட்டு உள்ள நிர்மாணிப்புக்கள் மற்றும் நவீனமயப்படுத்தல் கருத்திட்டங்கள் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

1. பொல்கொல்ல பயிற்சிக் கட்டிடத்தை நிர்மாணித்தல்
2. மஹரகம இளைஞர் நிலையத்தின் களஞ்சியசாலை மற்றும் சாரதிகள் விடுதி என்பவற்றினை நிர்மாணித்தல்.
3. நீச்சல் தடாகத்தை நிர்மாணித்தல் – மஹரகம இளைஞர் மத்தியநிலையம்

இதற்கு மேலதிகமாக கீழே குறிப்பிடப்பட்டு உள்ள கருத்திட்டங்கள் தற்போதாகும் போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

1. சிலாபம் பயிற்சி நிலையத்தினை மறுசீரமைத்தல் இறுதிக் கட்டம்
2. பெல்வூட் பயிற்சி நிலையம் நவீனமயப்படுத்தல் – கட்டம் 1
3. பெல்வூட் பயிற்சி நிலையம் நவீனமயப்படுத்தல் – கட்டம் 11
4. நுவரெலியா சுற்றுலா விடுதியினை நிர்மாணித்தல்

5.8 நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக 2022 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட முயற்சிகள்

இலக்கு / நோக்கம்	இலக்குள்	வெற்றிக் குறிகாட்டி	தற்போது வரை வெற்றியினைப் பெற்றுக் கொள்வதன் செயலாற்றுகை		
			-%0 %49	-%50 %74	-%75 %100
சுகாதாரமான வாழ்வினைப் பாதுகாத்தல் மற்றும் ஒவ்வொரு வயதுக் குழுவினருக்கும் தேகாரோக்கியத்தை விருத்தி செய்தல்.	2030 ஆம் திகதி ஆகும் போது தொற்றாத நோய்கள் காரணமாக ஏற்படும் அகால மரணங்களை சிகிச்சைகள் மூலமாக மற்றும் தடுக்கும் முறைகளின் ஊடாக மூன்றில் ஒன்றாக குறைத்துக் கொள்ளல் மற்றும் உள சுகாதார மற்றும் நன்னடத்தையினை ஊக்குவித்தல்.	விளையாட்டுத்துறை நிகழ்ச்சித்திட்டங்களு க்காகப் பங்குபற்றியவர்கள்			√
முழுமையான, நியாயமான, தரமான கல்வி ஒன்றினை உறுதிப்படுத்தல் மற்றும் அனைவருக்கும் வாழ்நாள் பூராகவும் கல்வி கற்பதற்கான வாய்ப்பினை வழங்குதல்	2030 ஆம் சுனிஸி தொழில்கள் மற்றும் தொழில் முயற்சி ஒன்றிற்கான தொழிநுட்ப மற்றும் தொழில் சார் தகைமைகள் உட்பட உரிய திறன்களைப் பெற்றுக் கொண்டுள்ள இளைஞர்கள் மற்றும் முதியோர்களின் எண்ணிக்கையினை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்தல்	2022ஆம் ஆண்டின் தொழில் சார், தொழில் முயற்சிப் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டுள்ள இளைஞர் யுவதிகளின் எண்ணிக்கை		√	

5.9 2022 ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட விஷேட வெற்றிகள் (புகைப்படங்களுடன்)

- ➢ தேசிய தேவைப்பாடுகளுக்கு தோள் கொடுப்பதற்காக இளைஞர் யுவதிகளை நவீன தொழிநுட்பத்தின் ஊடாக விவசாயப் பயிர்ச்செய்கைக்காக கூடிய ஆர்வத்தினை ஏற்படுத்தல. மேலும் நிலவும் பண்ணைக்கான நவீன தொழிநுட்ப முறைகளை அறிமுகம் செய்தல்.

உதா- கந்தளாய் பண்ணை நிலையத்தில் துளி நீர்ப்பாசன (Drip Irrigation) செயன்முறையின் கீழ் நவீன தொழிநுட்பத்துடன் கூடிய பயிர்ச்செய்கைகள், காளான் செய்கைகள்...)



- ➢ நிகழ்நிலை முறையின் ஊடாக (Online) கடமைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக மென்பொருட்களை நிர்மாணித்தல்.

- ➢ நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட எரிபொருள் நெருக்கடி நிலைமையின் போது QR Code மற்றும் பதிவு செய்தல் நடவடிக்கைகளுக்காக இளைஞர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் பங்களிப்பினை வழங்கி தேசிய பிரச்சினைக்கு தீர்வுகளை வழங்குவதற்கு உரிய வசதிகளை வழங்குதல்.

- ➢ வெளிவாரியான நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு இளைஞர்களுக்கு தலைமைத்துவத் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

➢ தொழில் இலக்குப் பயிற்சிகளுக்காக இளைஞர்களின் கூடிய பங்களிப்புக் கிடைத்தல்.

➢ சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு ஏராளமான நிகழ்ச்சித்திட்டங்களை இளைஞர் யுவதிகள் சுயமாக முன்வந்து மேற்கொள்ளல்.

.

➢ குறைந்த வருமானம் கொண்ட 1600 இளைஞர் யுவதிகளுக்கு சமூர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்துடன் இணைந்து யப்பான் மொழித் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

➢ நாட்டில் நிலவிய பல்வேறு நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியில் கலா நிலையங்களில் (பெல்வூட், மஹரகம, எரமிணியாய) 221 மாணவர்கள் கல்வி கற்றல் மற்றும் தற்போதாகும் போது அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் நிகழ்ச்சிகளுக்காக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் விஷேட நடன மற்றும் இசைக்குழுக்களின் ஒத்துழைப்பினை வழங்குதல்.

➢ விளையாட்டுக் கழகங்களுடன் 1155 இளைஞர் யுவதிகள் இணைந்துகொள்ளல்.

➢ நாட்டில் நிலவும் நிதி நெருக்கடி நிலைமைக்கு மத்தியில் இளைஞர் யுவதிகள் சுயமாக நாடு பூராகவும் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் தொண்டர் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

6 செயலாற்றுகை அறிக்கை 2022

6.1 தாபனத்தின் செயலாற்றுகை

1. ஒதுக்கீடுகளை வழங்குதல்.

2022 ஆம் ஆண்டில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்குரிய மொத்த வரவுகளில் ரூ.மி. **1,256,884** தொகை பொதுத் திறைசேரியில் இருந்தும் அமைச்சு மற்றும் வெளிவாரியான நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு அமைப்புக்களின் ஊடாக ரூ.மி. **104,767.3** தொகையும் கிடைக்கப்பெற்று உள்ளது. அதில் ரூ.மி. **1,239** தொகையினை மீண்டெழும் செலவுகளாகவும் மற்றும் ரூ.மி. **488** தொகையினை மூலதனச் செலவுகளாகவும் செலவு செய்யப்பட்டு உள்ளது. மேற்படி வருடத்தில் இளைஞர் சேவைகள் மன்றம் தனது உள்ளக வருமான வழிகளின் ஊடாக ரூ.மி. **230,558.53** தொகையினை ஈட்டிக் கொண்டுள்ளது.

2. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் 2022 ஆம் ஆண்டிற்குள் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் இளைஞர்களின் திறன் அபிவிருத்திக்காக 12,184 உள்நாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் 344,3220 இளைஞர்களின் பங்களிப்பில் நடாத்தப்பட்டு உள்ளன. அதற்காக செலவிடப்பட்டு உள்ள தொகை ரூ.மி. 62.42 தொகையாகும். 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட இளைஞர் விளையாட்டு அபிவிருத்திச் செயற்பாடுகளுள், நுண்கலை விருத்திச் செயற்பாடுகளின் ஊடாக 03 நுண்கலா நிலையங்களில் 188 பயிலுநர்கள் பாடநெறிகளைக் கற்று உள்ளதுடன், நடன மற்றும் நாடகக் கலைப் பாடநெறிகளுக்காக 35 பயிலுநர்கள் பங்குபற்றி உள்ளனர். விஷேட நடனக் குழுவிற்காக 20 இளைஞர் யுவதிகளும் இசைக் குழுவிற்காக 20 இளைஞர் யுவதிகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டு உள்ளனர். அதற்கு மேலதிகமாக தேசிய கலாச்சார நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ளது. இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இளைஞர் கழகங்களில் உறுப்புரிமை பெற்ற இளைஞர் யுவதிகளின் எண்ணிக்கை 266,601 ஆகும்.

விளையாட்டு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஹெய்யந்துடுவ பயிற்சி நிலையத்தினை மையமாகக்கொண்டு வொலிபோல் மற்றும் கபடி விளையாட்டுக் குலாம்கள் நடாத்தப்பட்டன. அதன் போது வொலிபோல் குலாமிற்காக பயிற்சி பெறுவதற்கு 27 பேர்களும் மற்றும் கபடி (ஆண்கள்) குலாமிற்காக 14 பேரும் பங்குபற்றி உள்ளனர். அதற்கு மேலதிகமாக வெளிவாரியான ஒதுக்கீடுகள் கிடைக்கப் பெறுவதன் மூலம் “**உலகை வெல்லும் நாங்கள் தலைமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**” இன் கீழ் மாகாண மட்டத்தில் 09 விளையாட்டுத்துறைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் இளைஞர் கழக வியாபாரங்களுடன் தொடர்பான இளம் தலைவர் தலைவிகளுக்காக நடாத்தப்பட்ட விளையாட்டு மற்றும் தலைமைத்துவப் பயிற்சி முகாம், யப்பான் இலங்கை விளையாட்டு மற்றும் கலாச்சார ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் இளைஞர் விவகாரத் துறையின் கடமை நடவடிக்கைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளன. மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை 3,132 ஆகும். அதற்கு மேலதிகமாக இளைஞர் சேவை விளையாட்டுக் கழகங்களின் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 17 விளையாட்டு நிகழ்ச்சிகளுக்காக பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளதுடன் அதற்காகப் பங்குபற்றிய இளைஞர்களின் எண்ணிக்கை 1155 ஆகும்.

ஐந்தாவது இலங்கை இளைஞர் பாராளுமன்றத்தினை நடைமுறைப்படுத்தல் மற்றும் அதன்போது இரண்டாவது கூட்டத் தொடரிற்காக மாலைதீவுக் குடியரசின் கௌரவ சபாநாயகர் மொஹமட் நஷீட் அவர்கள் பங்குபற்றியமை விஷேட சந்தர்ப்பம் ஒன்றாகக் குறிப்பிட முடியும். விவசாயத் தொழில் முயற்சியாளர்களைத் தெரிவு செய்வதற்காக தரவுக் கட்டமைப்பு ஒன்றினை நிர்மாணித்தல் இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்டது.

3. தொழிநுட்ப மற்றும் தொழில் சார் பயிற்சிச் செயற்பாடுகள்

- கைத்தொழில் மற்றும் தொழில்சார் அபிவிருத்திச் செயற்பாடுகளின் கீழ் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் 56 பயிற்சி நிலையங்களில் நடாத்திய 108 முழு நேர மற்றும் பகுதி நேரப் பாடநெறிகளுக்காக இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 18,315 ஆகும் என்பதுடன் வருட இறுதியில் 15,683 மாணவர்கள் பாடநெறியினைப் பூர்த்தி செய்துள்ளனர். அவர்களுள் 8,229 மாணவர்கள் NVQ மட்டத்திலான பாடநெறியினைப் பூர்த்தி செய்துள்ளனர். 2022 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதத்தில் 28 பயிலுநர்களின் பங்குபற்றலில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் தயாரிப்புத் தொழிநுட்ப டிப்ளோமாப் பாடநெறி (NVQ 5) 2022 செப்தெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்றது. அது 2023 செப்தெம்பர் மாதம் பூர்த்தி செய்யப்பட உள்ளது.
-

4. தொழில் முயற்சி மற்றும் விவசாய அபிவிருத்தி

இளைஞர் தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக 9000 இளைஞர்களைப் பதிவு செய்தல். 21 பண்ணை நிலையங்களை அபிவிருத்தி செய்து பராமரித்தல், மஹரகம பிரதான அலுவலகத்தினை மையமாகக் கொண்டு 15 விற்பனைக் கூடங்களுடன் பண்ணை உற்பத்தி விற்பனைச் சந்தைகளை நடாத்துதல். அதன் மொத்த வருமானம் ரூ. 1,755,993/- தொகை ஆகக் காணப்பட்டதுடன், தேறிய இலாபம் ரூ. 981,744/- தொகை ஆகக் காணப்பட்டது. விவசாயக் கம்பனிகளைப் பதிவு செய்வதனை ஆரம்பித்தல் இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்டது.

5. சர்வதேச இளைஞர் தொடர்புகள்

ட்ரினிடேட் டொபேகோவில் நடைபெற்ற பொதுநலவாய இரண்டாவது இளைஞர் பாராளுமன்றத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக 02 இளைஞர் யுவதிகள் பங்குபற்றுதல், 800 இளைஞர் யுவதிகளின் பங்குபற்றலில் 70 ஆம் யப்பான் நட்புறவு நிகழ்ச்சித்திட்டத்தனை நடாத்துதல் 2022.01.26 ஆம் திகதி எடின்பரோ பிரபு சர்வதேச விருது வழங்கல் நிகழ்ச்சித்திட்டமானது, 2019/2020/2021 ஆம் ஆண்டுகளுக்காக இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் டங்கன் வைட் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டதுடன் அதன் போது வெண்கல, வெள்ளி மற்றும் தங்கப் பதக்க விருதுகளைப் பெற்றுக் கொண்ட இளைஞர் யுவதிகளின் எண்ணிக்கை 450 ஆகும்.

6. அலுவலர் குழாத்தின் நடவடிக்கைகள் மற்றும் அபிவிருத்தி

ஆண்டிற்குள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அலுவலர் குலாத்தின் 36 உத்தியோகத்தர்களுக்காக உள்ளகப் பதவியுயர்வு வழங்குதல் மேற்கொள்ளப்பட்டது. 104 உத்தியோகத்தர்களுக்காக 03 கொள்ளளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. முகாமைத்துவத் தகவல்கள் முறைமை ஒன்றினை (MIS) நிர்மாணித்துப் பேணி வருதல்.

7. நிர்மாணப் பணிகள்

கடந்த வருடம் முதல் நிர்மாணிக்கப்பட்டு வந்த பொல்கொல்ல பயிற்சிக் கட்டிடத்தை நிர்மாணித்தல், மஹரகம இளைஞர் மத்திய நிலையத்தின் களஞ்சியசாலை மற்றும் சாரதிகள் விடுதி என்பவற்றினை நிர்மாணித்தல் மற்றும் மஹரகம இளைஞர் நிலையத்தின் நீச்சல் தடாகத்தினை நிர்மாணித்தல் மற்றும் நவீனமயப்படுத்தல் கருத்திட்டங்கள் வெற்றிகரமாக பூர்த்தி செய்து பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

6.2 குறுகிய கால மற்றும் நடுத்தரக் கால நடவடிக்கைகள்

குறுகிய கால நடவடிக்கைகள்

- காலத்திற்கு ஏற்ற இளைஞர்களின் தேவைப்பாடுகளை அடையாளம் காணல்.
- இளைஞர் யுவதிகளின் உள மற்றும் உடற் சுகாதாரத்தினைக் கட்டியெழுப்புவதற்காக பல்வேறு அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தொழில்சார் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றினை நடைமுறைப்படுத்தல்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையினை இலக்காகக் கொண்ட பாடநெறிகளை அறிமுகம் செய்தல்.
- பயிற்சிப் பாடநெறிகளின் தரத்தினை மேம்படுத்தல்.
- வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்களை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச மொழிப் பாடநெறிகளை அதிகரித்தல்.
- அறிவு மற்றும் வசதிகளை வழங்கி இளம் தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இளைஞர் அமைப்புக்களுடன் ஒத்துழைப்புடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- தீர்மானங்களை மேற்கொள்ளும் நடைமுறைக்காக இளைஞர் யுவதிகளுக்கு வசதிகள் மற்றும் சந்தர்ப்பங்களை வழங்குதல்.

நடுத்தரக் கால நடவடிக்கைகள்

- தாபனத்தின் தொலை நோக்கு, நோக்கங்கள் மற்றும் இலக்குகளுக்கு அமைய உபாயமார்க்க வழிமுறைகளைத் திட்டமிடுதல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.
- தாபனத்தின் தரத்தினை விருத்தி செய்தல் மற்றும் இளைஞர் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக சமூகக் கவர்ச்சியினை அதிகரித்தல்.
- விவசாயப் பொருளாதாரத்திலும் மற்றும் விவசாயத் தொழில் முயற்சிகளிலும் இளைஞர்களை ஈடுபடச் செய்தல்.
- வெளிநாட்டு இராஜ தந்திர தூதுக்குழுவுடன் ஒத்துழைப்புடன் செயற்பட்டு இளைஞர்களுக்கான சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளல்.
- பதவியணியின் வினைத்திறனுக்காக பாராட்டுதல், பயிற்சிகளை வழங்குவதன் ஊடாக உள ரீதியான சமமற்ற தன்மைகள் மற்றும் உறுதியற்ற தன்மைகளைக் குறைத்தல் மற்றும் உத்தியோகத்தர்களை ஊக்குவித்தல்.
- காலத்திற்கு ஏற்ற தேவைப்பாடுகளுக்கு அமைய, தொழிநுட்ப ரீதியான வழிமுறைகளை தாபனத்திற்குள் தோற்றுவித்தல்.

7 2022 ஆம் ஆண்டிற்கு உரிய வகையில் கணக்காய்வு விசாரணைகளின் மூலம் முன்வைக்கப்பட்டு உள்ள விடயங்களை சீர் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை

கணக்காய்வு விசாரணை இல.	கணக்காய்வு விசாரணை மற்றும் அதனூடாக சுட்டிக்காட்டப்பட்டு உள்ள விடயங்கள்	சீர் செய்வதற்காக எடுக்கப்பட்ட மற்றும் எதிர்வரும் காலத்தில் எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகள்
SYA/B/NYSC/2021/AQ12/	Sri Lanka Youth Start-Up Challenge வேலைத்திட்டம் தொடர்பான பரீட்சிப்பு	Sri Lanka Youth Start-Up Challenge நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படை நோக்கமாக இருந்தது இளம் தொழில் முயற்சியாளர்களைத் தோற்றுவிப்பது ஆகும். இதன் போது இளம் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதனை நோக்கமாகக் கொண்டு சிற்றளவு வியாபாரங்களை ஆரம்பித்து தேசிய மற்றும் சர்வதேச மட்டம் வரை தமது வியாபாரங்களை விருத்தி செய்து கொண்ட வெற்றியாளர்களான நபர்களைத் தோற்றுவிக்கும் குறு வீடியோ ஒன்று தயாரிக்கப்பட்டது. விஷேட கருத்திட்டங்கள் மற்றும் விவசாய அபிவிருத்திப் பிரிவினால் நடைமுறைப்பட்டு இருந்த சாரபூமி இளைஞர் பண்ணை உற்பத்திகள் மற்றும் விற்பனை ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம் என்பன 2021 ஏப்பிறல் 04 முதல் 06 வரை நடாத்தப்பட்டதுடன் கீழே குறிப்பிடப்பட்டு உள்ள நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளல் இதன் இலக்காகக் காணப்பட்டது. • இளைஞர் யுவதிகளில் விவசாய நடவடிக்கைகள் தொடர்பாக ஆர்வம் ஒன்றினை ஏற்படுத்தல். • நவீன தொழிநுட்ப விவசாய முறைகள் தொடர்பில் இளைஞர் யுவதிகளை அறிவூட்டல். • இளம் விவசாயிகளின் உற்பத்தித் துறையில் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்தல். • இளைஞர் யுவதிகளில் உளப்பாங்கு ரீதியான மாற்றம் ஒன்றினை ஏற்படுத்தி விவசாயத் துறையில் அதிக ஈடுபாட்டினை ஏற்படுத்தல்.
SYA/B/NYSC/2021/AQ1/3	2021 ஆம் ஆண்டில் பயிற்றப்பட்ட பயிலுநர்களுக்கு உத்தியோகபூர்வ ரீ சேட் கொள்வனவு செய்தல் தொடர்பான பரீட்சிப்பு	பிராந்திய பெறுகை நடவடிக்கைகளுக்காக விலைமனுக்களை கோரும் போது மாகாண சபைகள், மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் என்பவற்றை சார்ந்த வழங்குநர்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ளல் மேற்கொள்ளப்படுவதுடன், வழங்குநர்களைப் பதிவு செய்யும் ஆவணம் ஒன்று பேணி வரப்படும். எதிர்வரும் பெறுகை நடவடிக்கைகளின் போது அரச பெறுகை வழிகாட்டல்கள் கோவையின் .3.4.4 - 3.4.3 இன் கீழ் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வகைபார்த்துக் கொள்ளுமாறும், பெறுகை நடவடிக்கைகளின் போது உரிய கருவிகள் பொறி ளை உரிய முறையில் உட்சேர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும்,. கடமைகளைப் பொறுப்புடன் சரியான முறையில் நிறைவேற்றுமாறும் உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டு உள்ளன.

		எதிர்வரும் காலத்தில் பெறுகை நடவடிக்கைகளின் போது ஒவ்வொரு பெறுகை நடவடிக்கைகளுக்கும் தனித்தனியாக கோப்புக்களை உரிய முறையில் பேணி வருமாறும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. சகல பயிற்சி நிலையங்களிலும் பயிலுநர்களிடம் இருந்து ரீ சேட்களுக்காக பணம் அறவிடுவதாயின் அறவிடும் தொகை எவ்வளவு என்பதனையும் ஒவ்வொரு பயிற்சி நிலையத்தின் ஊடாகவும் சேகரிக்க எதிர்பார்க்கும் ரீ சேட் வருமானம் எவ்வளவு என்பதனையும் வருடாந்த வரவு செலவு மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது உள்ளடக்குமாறும் அதற்காக பிரதான அலுவலகத்தில் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் எனவும் உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டப்பட்டது.
SYA/B/NYSC/2021/AQ/14	ஹெய்யந்துடுவ பயிற்சி நிலையத்தின் களஞ்சியப் பரீட்சிப்பு	தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தொழில்சார் / கலாச்சாரப் பயிற்சி நடவடிக்கைகளுக்காக அத்தியவசிய பொருட்கள் வழங்கப்பட்டு இருக்காமையின் காரணமாக ஏற்பட்டுள்ள சிரமங்கள் மற்றும் பயிற்சிக் கொள்ளளவில் உள்ள குறைபாடுகள் என்பவற்றைக் கவனத்தில் கொண்டு அவற்றை மிகவும் பயனுறுதியுள்ள வகையிலும் மற்றும் வினைத்திறனுள்ள வகையிலும் மேற்கொள்வதற்கு அவசியமான தேவைப்பாடுகளை அடையாளம் கண்டு பொருட்கள்/ உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. அதன் பின்னர் உக்கிரமடைந்த கொரோனா நிலைமைகளுக்கு மத்தியில் நாட்டில் நிலவிய பயணத்தடை மற்றும் சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகள் என்பன காரணமாக உரிய நேரத்தில் வழங்கும் ஆற்றல் காணப்படவில்லை. மஹரகம பிரதான களஞ்சியசாலை தற்போதாகும் போது தற்காலிய இடம் ஒன்றில் பேணப்பட்டு வந்ததுடன், களஞ்சியத்தைப் பேணி வருவதற்கு போதிய இடவசதி காணப்படாமையினால் மேற்படி உபகரணங்களைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்வதற்கு பிரதான அலுவலகத்திற்கு மிகவும் அண்மையில் உள்ள பொருத்தமான இடம் ஹெய்யந்துடுவ பயிற்சி நிலையம் ஆகையினால் மேற்படி உபகரணங்கள் அங்கு களஞ்சியப்படுத்தப்பட்டதுடன், தற்போதாகும் போது மஹரகம பிரதான அலுவலகத்தின் புதிய களஞ்சியசாலையில் களஞ்சியப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. மேற்படி உபகரணங்கள் 2022.04.30 ஆம் திகதிக்கு முன்னர் வெளிக்களத்திற்கு வழங்கி பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
SYA/B/NYSC/2021/AQ/15	நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு 2021 -	வ/ட இளைஞர் சேவைகள் கம்பனி, கம்பனியின் நிதி ஆண்டினை ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 வரை திருத்தம் செய்வதற்கு ஆற்றல் உள்ளதா என்பது தொடர்பில் விசாரித்து அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மற்றும் அது தொடர்பில் அறிவூட்டுவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும். விடயப்பொறுப்பு உத்தியோகத்தர்களுடன்

		கலந்துரையாடி 2022 ஆம் ஆண்டு தொடக்கம் முறையான உள்ளக நிருவாக வழிமுறை ஒன்றினையும் மற்றும் ஆலோசனைகள் கோவை ஒன்றினையும் அறிமுகம் செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சகல பணிப்பாளர்கள் மற்றும் நிதி உத்தியோகத்தர்களுக்காக இறுதிக் கணக்குகளைத் தயாரித்தல் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி அறிவூட்டுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.கணக்கீட்டுக் கணினி முறைமையினை இற்றைப்படுத்தல் மற்றும் இறுதிக் கணக்குகளைத் தயாரிப்பதற்குத் தேவையான கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான விபரங்களை உரிய நேரத்தில் பிரதான அலுவலகத்திற்கு அறியச் செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாத உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட்டுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். கணக்காய்வு விசாரணையின் போது சுட்டிக்காட்டப்பட்டு உள்ள சீர் செய்தல்கள் 2022 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் ஜேர்னல் பதிவுகளை இட்டு சீர் செய்யப்பட்டு உள்ளன. மதிப்பீட்டு அறிக்கைகள் கிடைக்கப் பெற்றதன் பின்னர் கட்டிடங்களின் மீள்மதிப்பீட்டினை கணக்கில் சேர்ப்பதற்கு உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளல் மற்றும் முறையான வகையில் மதிப்பீட்டாளர்களினால் மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெற்றுக் கொண்டு அசையாத சொத்துக்களின் அண்ணளவான பெறுமதியை கணக்குகளில் சேர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். எம்பிலிபிட்டிய ப.நி. மற்றும் கொடகம ப.நி. என்பவற்றிற்கான ஜேர்னல் பதிவுகள் இடப்பட்டு உள்ளன. ஒருபெந்திவெவ ப.நி. இற்கு உரிய மீள்மதிப்பீட்டு இலாபம் கால்நடை வளங்கள் என்பவற்றை சரியாக மதிப்பீடு செய்து இருப்பில் சேர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். கணக்கீட்டுப் பிழைகள் ஏற்படாமல் இருப்பதற்கு வகைபார்த்துக் கொள்வதுடன் உரிய உத்தியோகத்தர்கள் விடயத்துடன் தொடர்புடைய வகையில் அறிவூட்டப்பட்டு உள்ளனர். மன்றம் தொடர்புபட்டு உள்ள 26 வழக்குகளுக்கான செலவினைக் குறைத்துக் கொள்வதற்கு எதிர்வரும் காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

SYA/B/NYSC/2021/AQ/16	Blood 4 Hope நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான பரீட்சிப்பு	நாட்டில் நிலவிய கொவிட் தொற்றுநோயின் முன்னிலையில் காலத்திற்கேற்ற, தேசிய தேவைப்பாடு ஒன்றுடன் கூடிய நிகழ்ச்சித்திட்டம் ஒன்றாக இலங்கை இளைஞர் பாராளுமன்றத்தின் பிரதான கருத்திட்டத்தின் பொதுமக்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் ஒன்றாகும். நாட்டில் நிலவிய கொவிட் தொற்றுநோய் காரணமாக பிரதான அலுவலக வாளகத்தில் விதிவிட நடன மற்றும் இசை இளைஞர் யுவதிகளும் காணப்பட்டமையினால் மற்றும் தொற்று நோய் காரணமாக அதன் வழிகாட்டல் வழிமுறைகளுக்கு அமைய வெளிவாரியான நபர்கள் தாபனத்தின் வளாகத்திற்குள் வருவதனைத் தடுப்பதற்காக முன்புற டோம் ஒன்றினை அமைத்து வாடகை அடிப்படையில் உபகரணங்களைப் பெற்று உரிய நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.
SYA/B/NYSC/2022/AQ01/	2021ஆம் ஆண்டின் உபசரிப்புச் செலவுகள் தொடர்பான பரீட்சிப்பு.	• தலைவர் அவர்களின் அலுவலகத்தில் இருந்து பதில்கள் வழங்கப்பட்டு உள்ளன. • பணிப்பாளரினால் எதிர்வரும் காலத்தில் (நிதி) நடைமுறைப்படுத்துவதற்கான பரிந்துரைகள் அது தொடர்பில் முன்வைக்கப்பட்டு உள்ளதுடன் பணிப்பாளர் நாயக அலுவலகத்திற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டு உள்ளன.
SYA/B/NYSC/2022/AQ/02	முறையற்ற நியமனங்கள் மற்றும் முறையற்ற வகையில் சேவையில் இருந்து விடுவித்தல் தொடர்பான பரீட்சிப்பு.	• கணக்காய்வு விசாரணையின் சில விடயங்களுக்காக 2022.07.07 ஆம் திகதியும் மற்றும் 2022.09.02 ஆம் • திகதி எஞ்சிய அனைத்து விடயங்களுக்காகவும் கணக்காய்வுப் பிரிவிற்கு பதில்கள் வழங்கப்பட்டு உள்ளன. • மேற்படி தொழில் சார் பயிற்சி ஆலோசகர் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் சேவையினைப் பெற்றுக் கொள்வதற்காக மன்றத்தின் பணிப்பாளர் சபையிடம் முன்வைக்கப்பட்டு உள்ளதுடன் 2022/35 ஆம் இலக்க மன்றத்தின் விஞ்ஞாபனத்திற்கான அனுமதி கிடைக்கப்பெற்று உள்ளது.
SYA/B/NYSC/2021/AQ/03	P.G 4908 கெப்வண்டியின் ஓட்டம் மற்றும் அதன் சாரதியின் கடமைகள் தொடர்பான மக்கள் பிரதிநிதித்துவத்தைப் பரீட்சித்தல்.	• கணக்காய்வு விசாரணையின் பல விடயங்களுக்கான முதலாவது பதில் 2022.06.29 ஆம் திகதி அரச கணக்காய்வுப் பிரிவிற்கு அனுப்பப்பட்டு உள்ளது. • கணக்காய்வு விசாரணையின் முழுமையான மற்றைய பகுதிக்கான பதில் 2022.10.05 ஆம் திகதி கணக்காய்வுப் பிரிவிற்கு அனுப்பப்பட்டு உள்ளது. • சகல கணக்காய்வு விசாரணைகளையும் புலனாய்வு செய்து நாளாந்த ஓட்டப்பதிவுகளை பேணி வருதல் தொடர்பான ஆலோசனைகள் தொடர்பில் 2022.10.06 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் சகல சாரதிகளும் அறிவூட்டப்பட்டு உள்ளனர்.

SYA/B/NYSC/2022/AQ/05	ஹெய்யந்துடுவ ப/நிலையத்தில் பலனற்ற சொத்துக்கள் தொடர்பான கணக்காய்வு.	• அரச கணக்காய்வுப் பிரிவிடம் 2022.10.05 ஆம் திகதி பதில்கள் முன்வைக்கப்பட்டு உள்ளன. • வாகனங்களின் ஏலவிற்பனைக்கான பத்திரிகை அறிவித்தலைப் பிரசுரிப்பதற்காக விநியோகப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. • ஹெய்யந்துடுவ உள்ளக விளையாட்டு அரங்கினை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளுக்கு உரிய வகையில் நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக ஆலோசனை வழங்கல் பிரிவின் பரிந்துரைகளுக்கு அமைய உரிய ஒப்பந்தகாரர்கள் கறுப்புப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டு உள்ளனர்.
SYA/B/NYSC/2022/AQ/06	உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு மேலதிக எரிபொருளினை வழங்குதல் தொடர்பான பரீட்சிப்பு 11-	• கணக்காய்வு விசாரணைக்கு 2022.12.12 ஆம் திகதி பதில்கள் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளன. • உத்தியோகபூர்வ வாகனங்களைப் பெற்றுக் கொண்டுள்ள எரிபொருள் அளவின் உச்ச அளவினைத் தாண்டியுள்ள சந்தர்ப்பங்களில் மன்றத்தின் பணிப்பாளர் சபையின் அனுமதியினைப் பெற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.
SYA/B/NYSC/2022/AQ/07	வரவு மற்றும் வெளியேற்றம் தொடர்பில் பதிலு செய்தல்.	• கணக்காய்வுப் பிரிவிற்கு 2022.08.15 ஆம் திகதி பதில்கள் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளன. • பல்வேறு தாபன ரீதியான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கூட்டங்கள் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களுக்காவும் பங்குபற்றுதல் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படுவதன் காரணமாக வரவு இடாப்பு ஒன்று பிரிவிற்குள் பேணி வரப்படுகின்றது. அவ்வாறே தாபன வளாகத்தில் இருந்து வெளியே செல்லும் ஒவ்வொரு நேரத்திலும் வெளியே செல்லும் மாதிரிப் படிவத்தில் தலைவரின் அனுமதி பெறுதல் மேற்கொள்ளப்படுவதுடன் அவ்வாறே மேற்படி சகல பிரதிகளையும் இற்றைப்படுத்தி பதிவு செய்து வைத்தல் பணிப்பாளர் (நிருவாகம்) அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.
SYA/B/NYSC/2022/AQ/08	தலைவர் அவர்களின் துருக்கி சுற்றுப் பயணம்.	• 2022.09.02 ஆம் திகதி அரச கணக்காய்வுப் பிரிவிடம் தகவல்கள் முன்வைக்கப்பட்டு உள்ளன. • எதிர்வரும் காலத்தில் வழிமுறையினை சீர் செய்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிய பிரிவுகளுக்கு அறிவூட்டப்பட்டு உள்ளது. .
SYA/B/NYSC/2022/AQ/09	விடுதி தொடர்பில் கிடைக்கப்பெற்ற பிரதிநிதித்துவம் தொடர்பான பரீட்சிப்பு-2022	• புலனாய்வு அறிக்கைக்கு அமைய யூத் வளாகத்தின் வதிவிட வசதிகளைப் பெற்றுக் கொள்பவர்களிடம் இருந்து கட்டணங்களை அறவிட்டுக் கொள்வதற்கு மன்றத்தின் விஞ்ஞாபனம் ஒன்றினைத் தயாரித்து சபையின் பணிப்பாளர் சபையிடம் முன்வைத்து அதற்காக மன்றத்தின் 2022/24 ஆம் இலக்க

		விஞ்ஞாபனத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டு உள்ளது. • தற்போதாகும் போது வளாகத்தில் வதிவிடங்களைப் பெற்றுக் கொள்ளும் உத்தியோகத்தர்களிடம் இருந்து மேற்படி தொகையினை அறவிட்டுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. • அரச கணக்காய்வுப் பிரிவிற்கு 2022.10.05 ஆம் திகதி தகவல்கள் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளன.
SYA/B/NYSC/2022/AQ/10	கிணிஹிரமல நாடகப் படைப்பு தொடர்பான பரீட்சிப்பு.	• அரச கணக்காய்வுப் பிரிவிற்கு 2022.11.23 ஆம் திகதி பதில்கள் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளன. • நாடகத்தின் 20 பாகங்கள் பதிப்பு செய்யப்பட்டதன் பின்னர் இசையினைச் சேர்த்தல் திரு. கருணாரத்ன விஜேவர்தன அவர்களினால் இலவசமாக மேற்கொள்வதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டு உள்ளது. • பதிப்பின் பின்னர் பார்வையிடுவதற்கான சந்தர்ப்பத்தினை வழங்குவதற்காக நாடகத்தினை விற்பனை செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.
SYA/B/NYSC/2022/AQ/11	வாகனப் பயன்பாடு தொடர்பான பரீட்சிப்பு.	• அரச கணக்காய்வுப் பிரிவிற்கு 2022.12.12 ஆம் திகதி பதில்கள் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளன. • பதிவினை இரத்து செய்வதற்காக ஆவணங்களை மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் அவர்களிடம் ஒப்படைத்து அதற்காக பணம் செலுத்தப்பட்டு உள்ளது. • பழுதுபார்ப்பதற்காக முன்வைக்கப்பட்டு உள்ள சில வாகனங்கள் தற்போதாகும் போது உரிய பழுதுபார்த்தல்கள் பூர்த்தி செய்யப்பட்ட உள்ளன. • கோரப்பட்டு உள்ள சகல தகவல்களும் தற்போதாகும் பொது வழங்கப்பட்டு உள்ளன. • குலாம் வாகனங்களைப் பரீட்சிக்கும்போது நாளாந்த ஓட்டப் பதிவுப் பத்திரங்களில் வாகனத்தில் பயணம் செய்யும் உத்தியோகத்தரின் உரிய விபரங்களை முன்வைப்பதற்கு சாரதிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டு உள்ளன.
SYA/B/NYSC//2022AQ/12	படங்கல பயிற்சி நிலையத்தின் நிதிக் கணக்காய்வு 2022 -	• கணக்காய்வு விசாரணைகளுக்கு உரிய பதில்கள் வரையப்பட்டு பணிப்பாளர் நாயகம் அவர்களிடம் முன்வைக்கப்பட்டு உள்ளன.
SYA/B/NYSC/2022/AQ/13	நுண்கலைத் திறன்கள் அபிவிருத்திப் பிரிவின் விஷேட நடனங்கள் மற்றும் இசைக் கச்சேரிகள் என்பவற்றிற்கான கொடுப்பனவுகள் தொடர்பான பரீட்சிப்பு.	• அரச கணக்காய்வுப் பிரிவிற்கு 2022.11.23 ஆம் திகதி பதில்கள் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளன. • கச்சேரிகளுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் தேவையான சேவைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் மேற்படி அறிக்கைகளை வழங்குவதற்காக உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டு உள்ளன.

SYA/B/NYSC/2022/AQ/14	தேசிய இளைஞர் மத்தியநிலைய விளையாட்டுக் கழகங்கள் தொடர்பான கணக்காய்வுப் பரீட்சிப்பு.	• கணக்காய்வு விசாரணைகளுக்கு உரிய பதில்கள் வரையப்பட்டு பணிப்பாளர் நாயகம் அவர்களிடம் முன்வைக்கப்பட்டு உள்ளன.
SYA/B/NYSC/2022/AQ/15	.தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இசைக் குழு மற்றும் ஜயகமு துருணு சக்தி இசைக் குழு என்பன தொடர்பான பரீட்சிப்பு	• அரச கணக்காய்வுப் பிரிவிற்கு 2023.01.23 ஆம் திகதி பதில்கள் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளன. • ஜயகமு துருணு சக்தி இசைக் குழுவின் கலைஞர்களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக 2022/06 ஆம் இலக்க மன்றத்தின் விஞ்ஞாபனத்தின் முலம் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டு உள்ளது. • அமைச்சில் நடைபெறும் வைபவங்களுக்காக இசைக் குழுவினை பங்குபற்றச் செய்வதற்கு உரிய சந்தர்ப்பத்தினை வழங்குமாறு அமைச்சுச் செயலாளருக்கு கடிதம் ஒன்றின் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.
SYA/B/NYSC/2022/AQ/16	நிலாவெளிப் பண்ணையின் செயலாற்றுகை தொடர்பான பரீட்சிப்பு.	• அரச கணக்காய்வுப் பிரிவிற்கு 203.01.31 ஆம் திகதி பதில்கள் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளன. • தற்போதாகும் போது எதிர்வரும் காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டு உள்ள வசதிகளுக்குத் தேவையான • நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. • அடுத்து வரும் செயலாற்றுகைத் திட்டத்திற்காக தேவையான சாத்தியவள அறிக்கை தயாரிக்கப்பட்டு உள்ளது. • காணியினை சார்ந்த வகையில் நடைமுறைப்படுத்தப்பட உள்ள கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய பெயர்ப் பதாகை பொருத்தப்பட்டு உள்ளது

8 சார்ந்த அறிக்கைகள் / ஆவணங்கள்.

- வருடாந்த அறிக்கை 2021, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்
- நிதி அறிக்கை 2022, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்
- செயலாற்றுகைத் திட்டம் 2022, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்
- மாவட்டச் செயலாற்றுகை அறிக்கைகள், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்
- தலைமை அலுவலகப் பிரிவுகளின் செயலாற்றுகை அறிக்கைகள், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்.
- திறைசேறிகள் / அமைச்சின் அபிவிருத்திச் செலவுகள் அறிக்கை – 2022 , தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

9 பின்னிணைப்பு 01 - கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தினை நடாத்துதல் தொடர்பாக வெளியிடப்பட்டு உள்ள சுற்றுநிருபங்களின் பிரகாரம் நடாத்தப்பட வேண்டிய குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை 04 ஆக தீர்மானிக்கப்பட்டு உள்ளதுடன், அதற்கமைய 2022 ஆம் ஆண்டிற்கு உரிய வகையில் 04 குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

உரிய கூட்டங்களை நடாத்தியதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட குழுவின் தீர்மானங்கள் உட்பட அறிக்கைகள் மன்றத்தின் பணிப்பாளர் சபை அனுமதிகளுக்காக முன்வைக்கப்பட்டு உள்ளன. மேற்கொள்ளப்பட்டு உள்ள குழுத் தீர்மானங்களின் சுருக்கம் ஒன்று கீழே குறிப்பிடப்பட்டு உள்ளது.

- அரச கணக்காய்வு விசாரணைகளின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டு உள்ள குறைபாடுகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- உள்ளக கணக்காய்வாளர் மற்றும் புலனாய்வு அறிக்கை என்பவற்றின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டு உள்ள குறைபாடுகளைத் தவிர்த்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான கண்காணிப்புக்களை வழங்குதல்.
- மொத்தக் காணிகள் மற்றும் சொத்துக்களை எடுத்துக்கொள்ளும் நடைமுறைகள் தொடர்பான செயலாற்றுகை மீளாய்வு
- தாபனத்தின் அலுவலர் குழாமிற்குரிய நடவடிக்கைகள் தொடர்பான மீளாய்வு
- தாபனத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான மீளாய்வு
- சொத்துக்களின் பொறுப்பு மற்றும் பொருட்கள் கணிப்பாய்வு நடவடிக்கைகள் தொடர்பான மீளாய்வு
- வருடாந்த கணக்குகளின் நடவடிக்கைகள் தொடர்பான மீளாய்வு
- தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துடன் இணைந்த வகையில் உள்ள நிறுவனங்களின் நடவடிக்கைகள் தொடர்பாக புலனாய்விற்கு உட்படுத்துதல்.

10 இணைப்பு 02 – நிதிக் கணக்காய்வுக் கூற்று

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

நிதி நிலையை கூற்று

31-12-2022 திகதியின்படி

விளக்கம்	குறிப்பு	2022 (ரூபா)	2021 ((ரூபா)
சொத்துக்கள்			
நடப்பு சொத்து			
றொக்கம் மற்றும் பணத்திற்கு சமமானவை	01	106,499,005	82,851,106
பாக்கிகள்	02	155,515,916	185,788,277
பங்கு	03	6,192,891	7,581,366
		268,207,812	**276,220,749**
பிற நிதி சொத்துக்கள்			
முதலீடுகள்	04	**1,799,170**	1,799,170
		1,799,170	**1,799,170**
நடப்பு அல்லாத சொத்துக்கள்			
சொத்து சாதனங்கள் மற்றும் உபகரணங்கள்	05	2,672,650,704	2,750,597,692
வேலை நடந்து கொண்டிருக்கிறது	06	558,786,843	559,342,449
எஞ்சிய இருப்பு (கால்நடை)	07	5,225,485	3,888,954
		3,236,663,032	**3,313,829,095**
மொத்த சொத்துக்கள்		**3,506,670,014**	**3,591,849,014**
கடன்கள்			
மொபைல் கிரெடிட்			
செலுத்த வேண்டியவை	08	191,935,339	138,355,918
பிற பொறுப்புகள்	09	53,259,672	49,320,861
		245,195,011	**187,676,779**
நடப்பு அல்லாத பொறுப்புகள்			
இலவச முன்பதிவுகள்	10	507,364,132	490,158,758
மொத்த வரவுகள்		**752,559,142**	**677,835,537**
நிகர சொத்துக்கள்		**2,754,110,871**	**2,914,013,477**
நிகர சொத்துக்கள் / நிறை			
பிற அரசு நிறுவனங்களின் பங்களிப்பாளர்கள்			
மூலதனம்	11	6,408,645,025	6,408,425,110
இருப்புக்கள்	12	582,856,566	435,263,615
திரட்டப்பட்ட உபரி/(பற்றாக்குறை)		(4,240,435,099)	(3,929,675,248)
மொத்த நிகர சொத்துக்கள் / நிறை		**2,751,066,491**	**2,914,013,477**

இந்த நிதிநிலை அறிக்கைகள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் பொதுத்துறை கணக்கியல் தரநிலைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த நிதிநிலை அறிக்கைகள், பக்க எண்ணிலிருந்து கணக்கியல் கொள்கைகள் மற்றும் பக்க எண்.

....

எச்எம்சிஜி தயாரத்ன

பணிப்பாளர்ர் (நிதி)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

....

கலாநிதி திரன் டி சில்வா

தலைவர் / பணிப்பாளர் நாயகம்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

இந்த நிதிநிலை அறிக்கையை தயாரித்து வழங்குவதற்கு நிர்வாக வாரியம் பொறுப்பாகும். இந்த நிதிநிலை அறிக்கை மேலாண்மை வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கையொப்பமிடப்பட்டது.

....

டீ யு காமினி விக்கிரமபால

பணிப்பாளர் சபை உறுப்பினர்

தேசிய இளைஞர் சேவை மன்றம்

....

எல்பிவி எரந்த லியனகே

பணிப்பாளர் சபை உறுப்பினர்

தேசிய இளைஞர் சேவை மன்றம்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

2022-12-31 திகதிக்கு இறுதி வருடத்திற்கான

நிதி நிலைக் கூற்று

விபரம்	குறிப்பு	2022 (ரூபா.)	2021 (ரூபா)
வருவாய்			
அரசாங்க பங்களிப்பு (மீண்டெழும்)		1,174,969,000	1,201,441,50
அரசு பங்களிப்பு (மேம்பாடு)		76,552,109	274,427,21
		1,251,521,109	**1,475,868,716**
வெளிப்புற பங்களிப்பு (தொடர்ந்து)			
மாகாண சபை		-	393,12
அமைச்சகங்கள் மற்றும் அரசு நிறுவனங்கள் (மீண்டும்)		44,079,548	102,120,179
வெளிநாட்டு அமைப்புகள்		553,107	8,464,912
பிற வெளிப்புற முகவர்		52,266,961	4,090,57
		1,348,420,724	**1,590,937,501**
உள் வருவாய்			
தேசிய இளைஞர் மையம் நடவடிக்கைகள்	13	25 868 55171	24,628,757
பயிற்சி மைய வருவாய்	14	174,961,341	120,840,093
இதர வருமானம்	15	33,105,435	9,894,475
நிலையான சொத்துக்களை அகற்றுவதில் ஆதாயம்		2,750,267	934,334
அரை கடன் அதிக சந்தா		35,000	35,000
பண்ணை முகவர் கணக்கு	16	10,725,986	6,638,22
		247,446,580	**162,970,883**
		1,595,867,304	**1,753,908,383**
இயக்க செலவுகள்			
குறைக்கப்பட்டது:-			
நிறுவன மற்றும் நிர்வாக செலவுகள்	17	(1,240,223,289)	(1,239,858,22
நிலையான சொத்துக்களின் தேய்மானம்		(274,308,380)	(274,551,97
இளைஞர் அபிவிருத்தி செலவுகள்	18	(337,046,009)	(488,686,85
		(1,851,577,679)	**(2,003,097,063)**
செலவு மேலதிகம் / பற்றாக்குறை		(258,754,754)	(249,188,68
சமநிலை முன்னோக்கி கொண்டு வரப்பட்டது			
செலவு மேலதிகம் / குறைபாடு		(3,929,675,248)	(3,678,717,73
முந்தைய வருட செலவு சமபடுத்தல்		(52,005,097)	(1,768,83
முன்கொண்டு செல்லல்		**(4,237,390,719)**	**(3,929,675,248)**

11 தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2022 ஆம் ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்கு முறைகளின் தேவைப்பாடு தொடர்பான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கை

எஸ்வைஏ/டி/என்வைஎஸ்சீ/1/22/92 2023 மே 26

தலைவர்
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 99 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிச் செயலாற்றல் கூற்றில் காலப்பகுதியின் போது

இனங்காணப்பட்ட அனைத்து வருமானங்கள் மற்றும் செலவினங்களை உள்ளடக்குவது அவசியமான போதிலும் முன்னைய ஆண்டுக்கான ரூபா 93 மில்லியன் கூட்டுமொத்த தொகையான அட்டுறு செலவினங்களிற்காக ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்காததால் கடன்கொடுத்தோரின் ஆரம்ப மீதி அந்தத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டது.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் நிலையான சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்யும் போது, அந்த சொத்து வகையைச் சேர்ந்த அனைத்து சொத்துக்களும் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும், ஆனால் 2021 ஆம் ஆண்டில் 05 நிலையங்களுக்குச் சொந்தமான ரூபா 46 மில்லியன் பெறுமதியான கட்டிடங்கள் மற்றும் 2022 ஆம் ஆண்டில் 03 நிலையங்களுக்குச் சொந்தமான ரூபா 242 மில்லியன் பெறுமதியான 2 கட்டிடங்கள் மற்றும் 3 காணிகள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது.

(இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 14 இன் 40 ஆம் பந்தியின் பிரகாரம் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் திரண்ட ஊதியம், வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது ஸ்ரீ லங்கா யுத் சேர்விஸ் லிமிட்டட்டின் தலைவராக பதிற்கடமையாற்றியமைக்காக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவருக்கு செலுத்தப்பட்ட ரூபா 460,000 தொகையான படி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 27 ஆம் பந்தியின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மன்றத்தினால் குடியிருக்கப்படுகின்ற 61 காணிகளுக்குரிய 234.69 ஏக்கர் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன் மன்றத்திற்கு சொந்தமான 06 ஏக்கரும் 57.78 பேர்ச்களும் உடைய 06 காணிகளின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 8 இன் 22 ஆம் பந்தியின் பிரகாரம் களஞ்சியங்கள் மற்றும் சாரதி விடுதியின் நிர்மாணச் செயற்திட்டங்கள் தொடர்பாக மீளாய்வாண்டில் நீடிப்புக் கிரயம், விலை வேறுபாடு மற்றும் தாமதக் கட்டணங்கள் என ஒப்பந்ததாரரால் ரூபா 7.3 மில்லியனிற்கு சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியல்களிற்கு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2012-2019 ஆண்டுகளில் தொடங்கப்பட்ட நடைமுறை வேலைக் கணக்கில் உள்ளடக்கப்பட்ட ரூபா 520 மில்லியன் பெறுமதியான 10 செயற்திட்டங்களில்

நிதி ஒதுக்கீடு கிடைக்காததால் ரூபா 14 மில்லியன் பெறுமதியான 7 செயற்திட்டங்களும் பட்டியலிடப்பட்ட திகதியில் பூர்த்தி செய்யப்படாததால் ரூபா 159 மில்லியன் பெறுமதியான 3 செயற்திட்டங்களும் மன்றத்தால் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

(எ) நடைமுறை வேலைக் கணக்கில் உள்ளடக்கப்பட்ட 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் பூர்த்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்ட 02 நிர்மாண செயற்திட்டங்களுடன் தொடர்புடைய ரூபா 180 மில்லியன் தொகை கட்டிடக் கணக்கிற்கு மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், தொடர்புடைய ரூபா 9 மில்லியன் பெறுமானத்தேய்வு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்காததால் மீளாய்வாண்டின் பற்றாக்குறையும் அந்தத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஏ) நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 74.7 மில்லியன் பெறுமதியான 12 காணிகளின் உரிமைத்துவம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2014 - 2018 இல் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 2.8 மில்லியன் பெறுமதியான தற்காலிக கட்டிடங்கள் பௌதீக ரீதியாக காணப்படவில்லை.

(ஒ) செலுத்த வேண்டிய மீதியில் ரூபா 10 மில்லியன் தொகை ஸ்ரீ லங்கா யுத் சேர்விஸ் லிமிட்டட்டிற்கு செலுத்த வேண்டியதாகக் காட்டப்பட்டிருந்த போதிலும் கம்பனியின் மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் மன்றத்திலிருந்து பெறவேண்டிய மீதி ரூபா 80 மில்லியனாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இணக்கம் செய்யப்படாத ரூபா 70 மில்லியன் மீதி காணப்பட்டது.

(ஓ) மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கு காசாக ரூபா 9.8 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் கொள்வனவுகள் காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 52.8 மில்லியனாக காட்டப்பட்டிருந்ததன் காரணமாக முதலீட்டு நடவடிக்கைகள் ரூபா 43 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளன.

(ஔ) மீளாய்வாண்டின் நடைமுறை வேலைக்காக ரூபா 8.2 மில்லியன் தொகை காசாக செலுத்தப்பட்டிருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் அது ரூபா 0.5 மில்லியன் பெறவேண்டியவையாக காட்ப்பட்டுள்ளதால் முதலீட்டு நடவடிக்கைகள் ரூபா 8.7 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன.

(க) 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பூர்த்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்ட இரண்டு நிர்மாண செயற்திட்டங்களுடன் தொடர்புடைய ரூபா 9 மில்லியன் பெறுமதியான கட்டிடங்கள் அந்த ஆண்டுகளில் மூலதனமாக்கப்படாமல் மீண்டெழும் செலவினங்களாக பதிவழிக்கப்பட்டன.

(கா) இளைஞர் பரிசுப் பிரிவின் நடைமுறைக் கணக்கில் ரூபா 1.3 மில்லியன் மீதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(கி) 2022 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முந்தைய ஆண்டுகளில் வெளியேறிய 10 உத்தியோகத்தர்களின் சார்பாக ரூபா 4.4 மில்லியன் தொகையான செலுத்த வேண்டிய பணிக்கொடை மீளாய்வாண்டில் அட்டுறு செலவினங்களாகக் காட்டப்பட்டிருக்கவில்லை.

(கீ) 2021 ஆம் ஆண்டில் பதவி விலகிய 05 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டில் ரூபா 966,712 பணிக்கொடை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு சேவையை விட்டு வெளியேறிய பின்னர் காலப்பகுதிக்கான ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் உட்பட 2022 ஆம் ஆண்டில் சம்பளமாக ரூபா 265,231 செலுத்தப்பட்டுள்ளது. 1999 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளில் சேவையில் இருந்து ஓய்வு பெற்ற ஐந்து உத்தியோகத்தர்களிற்கு ரூபா 1,254,644 பணிக்கொடையை தாமதமின்றி செலுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கு) நிதி நிலைமைக் கூற்றில் ஏனைய பொறுப்புக்களின் கீழ் ரூபா 4.9 மில்லியன் தொகையான வெளிநாட்டு நிறுவனங்களாகக் காட்டப்பட்டிருந்த 04 வெளி நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டியவை வெளிபடுத்தப்படாததால் அந்த கொடுக்கல் வாங்கல்களின் சரியான தன்மை, முழுமைத் தன்மை மற்றும் இருக்கும் தன்மை ஆகியவற்றை உறுதிப்படுத்த முடியவில்லை.

(கூ) பெறவேண்டிய மீதியில் உள்ளடக்கப்பட்ட 2000 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்கான ரூபா 1.2 மில்லியன் அறவிடப்படாத மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கெ) இரண்டு வருடங்களுக்கும் மேலாக காணப்படும் ரூபா 1.8 மில்லியன் தொகையான செலுத்த வேண்டிய வைப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், நானாவித கடன்கொடுத்தோர், செலுத்தப்படாத சம்பளங்கள், செலுத்தப்படாத

நிறுத்திவைத்தல் பணம், செலுத்த வேண்டிய வைப்புக்கள் மற்றும் சம்பள வைப்புக்களின் ரூபா 16.4 மில்லியன் கூட்டுமொத்தமான 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய மிதிகள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 மன்றத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

மன்றத்தின் 2022 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தகவல்களை ஏனைய தகவல்கள் உள்ளடக்குகின்ற போதிலும் இக் கணக்காய்வாளர் அறிக்கை திகதியின் பின்னர் எனக்கு கிடைக்கக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்ற நிதிக்கூற்றுக்கள் மற்றும் அவை தொடர்பான எனது கணக்காய்வாளர் அறிக்கையை உள்ளடக்கவில்லை. ஏனைய தகவல்களிற்கு முகாமைத்துவம் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்குவதில்லை. அத்துடன் அவை தொடர்பாக எந்தவொரு உறுதிப்பாட்டு முடிவையும் நான் தெரிவிக்கவில்லை.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்வு தொடர்பாக மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்கள் கிடைக்கும் போது அதனை வாசிப்பது எனது பொறுப்பாகும். அவ்வாறு மேற்கொள்வதன் மூலம் ஏனைய தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வில் பெறப்பட்ட எனது அறிவுடன் பொருண்மையாக பொருந்தாது உள்ளதா அல்லது இல்லாவிடின் பொருண்மையாக தவறானதாக தோன்றுகின்றதா என்பது கருத்தில் கொள்ளப்படுகின்றது.

மன்றத்தின் 2022 ஆண்டறிக்கையை நான் வாசிக்கும் போது அதில் பொருண்மையான தவறான கூற்றுக்கள் காணப்படுவதாக நான் முடிவுசெய்தால் அவ் விடயத்தை சீர்செய்வதற்காக அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களிற்கு நான் தெரிவிக்க வேண்டும். மேலும் பொருண்மையான திருத்தம் செய்யப்படாத தவறான கூற்றுக்கள் காணப்பட்டால் அவை அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கையில் உள்ளடக்கப்பட்டு காலக்கிரமத்தில் பட்டியல்படுத்தப்படும்.

1.4 **நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு மன்றம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.5 **நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த

நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு மன்றத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள

நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

2.1.1 எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் மன்றத்தால் வைத்திருக்கப்படுகின்றன.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமா்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 இந்த அறிக்கையின் (அ), (ஆ) மற்றும் (ஈ) ஆம் அவதானிப்புக்களை தவிர்த்து 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமா்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

2.2 மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை;

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே மன்றத்தால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் மன்றத்தின் ஆளுகை சபை உறுப்பினா் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதை குறிப்பிடுதல்.

2.2.2 பின்வரும் அவதானிப்பு தவிர 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மன்றத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் மன்றம் இணங்கியொழுகாதுள்ளமையை குறிப்பிடுதல்.

	சட்டம், விதி/ பிரமாணத்திற்கான தொடா்பு	அவதானிப்பு
(அ)	1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 8 ஆம் பிரிவு	ஒவ்வொரு நிதியாண்டுக்கும் பாதீடொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மன்றத்தால் தயாரிக்கப்பட்ட பாதீடு நிதி வளமூலங்களை எதிர்வுகூறாமல் செலவினங்களை மாத்திரமே எதிர்வுகூறியுள்ளது.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் 156 மற்றும் தாபன	உத்தியோகத்தர் ஒருவரின் தாமதம், அலட்சியம், தவறு அல்லது மோசடி ஆகியவற்றால் அரசாங்கத்திற்கு ஏற்படும் எந்த இழப்புக்கும்

விதிக்கோவையின் II ஆம் பகுதி	தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்கப்பட வேண்டியதுடன் அதனால் ஏற்படும் இழப்பு திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். எனினும், ரூபா 10.9 மில்லியன் கிரயமான கோழி தீவனத்தை கொள்வனவு செய்யும் பெறுகை நடைமுறையில் பெறுகைக் குழுவின் அங்கீகரிக்கப்பட்ட வரம்புகளுக்கு அப்பால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் காரணமாகவும் ஏனைய பண்ணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விலைகளை ஒப்பிடாமல் கவனக்குறைவாக நடவடிக்கைகளை மேற்கொண்டமை காரணமாகவும் ஏற்பட்ட ஏறத்தாழ ரூபா 4.6 மில்லியன் நட்டம் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(இ) 2018 திசெம்பர் 07 ஆம் திகதிய பிஎஸ்/எஸ்பி/எஸ்பீ/21/2018 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்றறிக்கை	வதிவிட கற்கைநெறிகளை நடாத்துவதற்கு பயிற்சி நிலையங்களில் போதிய வசதிகளை மன்றம் கொண்டிருந்த போதிலும் வெளி நிறுவனமொன்றில் நடாத்தப்படும் சமூக மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான வதிவிடக் கட்டணங்கள் மற்றும் உணவுச் செலவினங்களாக ரூபா 24.2 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.
(ஈ) 2015 செப்தெம்பர் 25 ஆம் திகதிய எஸ்பி/எஸ்பீ/07/15 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்றறிக்கை	நிகழ்வுகள், கருத்தரங்கு மற்றும் செயலமர்வு ஆகியவற்றிற்கு குறைந்த கிரயத்தில் பெறக்கூடிய நிறுவனங்களை மாத்திரமே தெரிவு செய்ய வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதற்கு இணங்காமல் பெறுகை நடைமுறைகளை பின்பற்றாமல் தனியார் நிறுவனமொன்றின் மூலம் சமூக மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்கு மன்றம் ஒழுங்கு செய்திருந்தது.
(உ) 2021 திசெம்பர் 21 ஆம் திகதிய 3/2021 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 04.02 இன் iii ஆம் பந்தி	உள்ளூர் நிதிகளைப் பயன்படுத்தி வெளிநாட்டுப் பயணங்கள் ஒழுங்கு செய்யப்படக் கூடாது என்றும், உத்தியோகபூர்வ அரசாங்க குறித்துரைக்கப்பட்ட பங்கேற்பு இலங்கைக்கு அவசியமானால் தவிர, உள்ளூர் நிதிகளைச்

செலவிட்டு அதிகாரிகள் மாநாடுகள்/ செயலமர்வுகள் போன்றவற்றில் பங்கேற்கக்கூடாது என்றும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் ரூபா 1.8 மில்லியன் உள்ளூர் நிதி தலைவர்/ பணிப்பாளர் நாயகத்திற்கான இடைநேர் படிகள், அமைய படிகள் மற்றும் விமான பயணச்சீட்டுகளுக்காக செலவிடப்பட்டுள்ளது.

(ஊ)	2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவு	மன்றத்தின் வளங்கள் வரிசை அமைச்சுக்கு வழங்கப்படக்கூடாது என்ற போதிலும் மன்றத்திற்கு சொந்தமான 02 வாகனங்கள் 2015 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வெளி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மன்றம் அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க செயலாற்றியிருக்காதமையை குறிப்பிடுதல்.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மன்றத்தின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காதமையை குறிப்பிடுதல்.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) 98 சதவீத மூலதன உரிமையைக் கொண்ட துணைக்கம்பனியான ஸ்ரீ லங்கா யுத் சேர்விஸஸ் லிமிட்டட்டின் நிதிக்கூற்றுக்களுடன் 2022 திசெம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டிற்கான தேசிய இளைஞர் மன்றத்தின் நிதிக்கூற்றுக்கள் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் ஸ்ரீ லங்கா யுத் சேர்விஸஸ் லிமிட்டட் கடைசியாக கணக்காய்வுக்காக சமர்ப்பித்திருந்த 2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கம்பனியின் ரூபா 167 மில்லியன் சொத்துக்கள், ரூபா 92 மில்லியன் பொறுப்புக்கள் மற்றும் ரூபா 184 மில்லியன் வருமானம் மற்றும் ரூபா 116 மில்லியன் செலவினங்கள் 2022 ஆம் ஆண்டில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

(ஆ) 2020 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படாதிருந்த ரூபா 1.3 மில்லியன் பெறுமதியான 97 நுகர்பொருள் உருப்படிகள் காணப்பட்டன.

(இ) மன்றத்தினால் 2015 முதல் 2022 திசெம்பர் 31 வரை ஏனைய அரசாங்க நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டிருந்த 02 வாகனங்களை ஒப்படைப்பதற்கோ அல்லது கையேற்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) லெவ்வெகொட பயிற்சி நிலையத்திற்காக ஹலிலெல பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட 24 ஏக்கர் 03 றூட்கள் மற்றும் 53 பேர்ச்கள் காணிகளில், 13 ஏக்கர் 03 றூட்கள் மற்றும் 50 பேர்ச்கள் வரைபடத்தின் பிரகாரம் பௌதீக ரீதியாக காணப்படவில்லை. மேலும் அந்த காணித் துண்டின் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு தீர்வு காணப்படவில்லை.

(உ) 2021 ஆம் ஆண்டில் கினிஹிரிய மால என்ற தொலைக்காட்சி நாடகம் புதிய முயற்சியாக உருவாக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இந்த முயற்சி 2022 திசெம்பர் 31 வரை கண்டுபிடிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் செலுத்தப்பட்ட ரூபா 4.8 மில்லியன் விளைவற்ற செலவினமாகியிருந்தது.

(ஊ) எரமினியாய அழகியல் மற்றும் பண்ணை பயிற்சி நிலையத்தில் உடலமைப்பு நிலையத்தை நிறுவுவதற்கும் உபகரணத் தொகுதிகளை கொள்வனவு செய்வதற்கும் ரூபா 1.1 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அவை நிலையத்தில் விளைவற்றிருந்தன.

(எ) 2017 ஆம் ஆண்டின் அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நிலாவெளி பண்ணைக்காக 200 ஏக்கர் காணிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் பயிற்சி கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை, மேலும் அதிகாரச்சட்டத்தின் மூலம் குறித்துரைக்கப்பட்டிருக்காத 29.5 ஏக்கர் மாத்திரமே பண்ணையைப் பராமரிப்பதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. பயிர்ச்செய்கை மற்றும் வருமானம் இன்றி 03 வருடங்களாக பாதுகாப்பு மற்றும் பராமரிப்புக்காக ரூபா 15.5 மில்லியன் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் நிர்மாணத்திற்காக ரூபா 22.9 மில்லியன் மற்றும் சட்டரீதியான உரிமைத்துவத்தை பெற்றுக்கொள்வதற்கான சட்ட நடவடிக்கைகளுக்காக ரூபா 652,500 செலவிடப்பட்டது. மேலும், கால்நடை வளர்ப்புக்கு ரூபா 5.2 மில்லியன் தொகை செலவிடப்பட்டது.

(ஏ) 1990 இன் 01 ஆம் இலக்க சொத்துக் சுவீகரிப்பு சட்டத்தின் அவசரகால சட்ட ஏற்பாடுகளின் கீழ் மன்றத்திற்கு ஒதுக்கப்பட்ட ஹல்தலமுல்ல பிரதேச செயலக பிரிவில் உள்ள பலாங்கொடை பொலிஸ் பிரிவில் அமைந்துள்ள 01 ஏக்கர் 03 றூட்கள் 30 பேர்ச்கள் கொண்ட வல்ஹபுதென்ன பதன வத்த காணி மற்றும் கட்டிடம் 2021 பெப்ரவரி 25 இல் ரூபா 7.6 மில்லியனிற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அது தற்போது விளைவற்றிருந்ததுடன்

காணியில் இருக்கும் கட்டிடம் முறையான பராமரிப்பு இல்லாததால் அழிந்து போகும் அபாயத்தில் உள்ளது.

(ஐ) மன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளுக்காக மன்றத்தின் சொந்த நிதி பேணப்பட வேண்டிய போதிலும் 1979 இன் 69 ஆம் இலக்க தேசிய இளைஞர் சேவை மன்றச் சட்டத்தின் 26 (1) மற்றும் (2) ஆம் பிரிவுகளின் பிரகாரம் சட்டத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக விளையாட்டுக் கழகங்கள் மற்றும் இளைஞர் கழகங்கள் நிறுவப்பட்டன. ரூபா 20.5 மில்லியன் நிதிச் சொத்துக்களைக் கொண்டிருந்த இந்தச் சங்கங்களின் செயற்பாடுகளுக்காக மன்றத்தின் பதவியணியினரும் பௌதீக வளங்களும் பயன்படுத்தப்பட்டு நிதி அறிக்கைகள் மன்றத்தின் முகாமைத்துவத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) மன்றத்தில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 46 வழக்குகள் தொடரப்பட்டன, அவற்றில் 24 வழக்குகள் அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பான வழக்குகளாக இருந்ததுடன் 04 காணி வழக்குகள் 2011 மற்றும் 2022 இற்கு இடையில் மன்றத்தால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மொத்த வழக்குகளில் 09 வழக்குகள் 05 ஆண்டுகளுக்கு முன்னரிலிருந்து காணப்பட்டமை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

(ஓ) தேசிய இளைஞர் மன்றத்தின் பிரதான களஞ்சியங்களில் உள்ள ரூபா 3.5 மில்லியன் பெறுமதியான 37 வகையான உருப்படிகள் பிரதான களஞ்சியங்களில் இருந்து 05 முதல் 33 வருடங்கள் வரை பல்வேறு தனிநபர்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்கு தற்காலிகமாக வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றை மீண்டும் முக்கிய களஞ்சியங்களுக்கு பெற்றுக்கொண்டு பொறுப்பான அதிகாரிகளிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) போதிய எண்ணிக்கையிலான பயிற்சியாளர்கள் இல்லாததாலும், ஆலோசனைக் கட்டணக் கொடுப்பனவிற்கு மன்றத்தால் போதிய நிதி வழங்கப்படாததாலும் 2022 ஆம் ஆண்டில் 13 மாவட்டங்களில் உள்ள 24 கற்கைநெறிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. மேலும், தொலைக்காட்சி தயாரிப்பு தொழில்நுட்பத்தில் தேசிய டிப்ளோமா கற்கைநெறிக்கு 2022 திசெம்பர் 31 வரை தராதர அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(க) 25 மடிக்கணனிகள் யப்பானில் வேலைவாய்ப்பை வழங்கும் நோக்கில் யப்பானிய மொழி கற்கைநெறியை தொடங்குவதற்கு 2022 ஆம் ஆண்டில் ரூபா 3.7 மில்லியன் பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் உரிய கற்கைநெறி தொடங்கப்பட்டிருக்காததால், மேற்படி நோக்கத்துடன்

தொடர்புபடாதுள்ள மன்றத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு மடிக்கணனிகள் வழங்கப்பட்டன.

(கா) 2019 ஆம் ஆண்டு முதல் 13 நாட்கள் முதல் 1 ½ வருடங்கள் வரையான காலப்பகுதிக்குள் மன்றத்தின் தலைவர்/ பணிப்பாளர் நாயகம் பதவிக்கு 08 பேர் அவ்வப்போது நியமிக்கப்பட்டனர். பதிற்கடமை மற்றும் ஒப்பந்த அடிப்படையில் மன்றத்தின் முக்கிய பதவிகளில் 02 பதவிகள் இருந்ததுடன் 26 பிரதி மற்றும் உதவியாளர் பதவிகள் மற்றும் 24 தொழிற்பயிற்சி பயிற்றுநர் (ஒப்பந்தம்) பதவிகள் வெற்றிடமாக உள்ளன. 2016 ஆம் ஆண்டு முதல் அங்கீகரிக்கப்படாத 10 பதவிகளுக்கு 240 உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் பதிற்கடமை அடிப்படையில் 121 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு கடமைகள் மேவுகை செய்யப்பட்டு கடமைகள் ஒதுக்கப்பட்டிருந்தது. மேலும் உதவிப் பணிப்பாளர் பதவி உட்பட 03 பதவிகள் இளைஞர் சேவை உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்தன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி